Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**Restaurant Tilko**



10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)

**Tilko Jaffna City Hotel**
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
TILKO (C/1501)

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | வைகாசி 06 | சனிக்கிழமை (19.05.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 231



04



10



15



09



06

# பலாலி ஆசிரியர் கலாசாலை தொடர்ந்தும் இயங்கும்



(யாழ்பாணம்)

யாழ். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுடன் இணைப்பது தொடர்பாக அண்மைக்காலமாக எழுந்த பிரச்சினைக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளார். இதன் மூலம் பலாலி ஆசிரிய கலாசாலை தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் இயங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

பழைமை வாய்ந்ததும் முன்னணி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுமான பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியானது கடந்தகால அழிவு யுத்தம் காரணமாக உயர்பாதுகாப்பு வலையத்தினுள் அமைந்திருந்ததனால், அதன் செயற்பாடுகள் திருநெல்வேலி, முத்துத்தம்பி பாடசாலையில் குறுகிய இடத்தில் குறைபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் இதனைக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுடன் இணைப்பது தொடர்பிலான கருத்துக்கள் அண்மைக் காலமாக நிலவி வந்தன. பலாலி ஆசிரியர்

19 ஆம் பக்கம் பார்க்க

## துயர்பகிர்வு நிகழ்வு

மே 18 முள்ளிவாய்க்கால் துயர் பகிர்வு நிகழ்வு நேற்று பிற்பகல் 5.00 மணியளவில் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் உபதலைவர் பேராசிரியர் எஸ்.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் உட்பட ஏனைய இடங்களில் உயிரிழந்த மக்களின் ஆத்மாக்களுக்கான சாந்தி வேண்டி மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டதுடன் தீபங்களும் ஏற்றப்பட்டன. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராசா சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் யாழ். மாவட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தீபங்கள் ஏற்றி உறவுகளை நினைவு கூர்ந்ததுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

## அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்தார் அமைச்சர் பீரிஸ்

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அந்நாட்டு பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் பலரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி பராக் ஒபாமாவின் விசேட உதவியாளர், தேசிய பாதுகாப்புச் சபையின் பல்தரப்பு விவகாரப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் சமந்த பவர் ஆகியோரையும் அமைச்சர் பீரிஸ் சந்தித்தார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான நிலைவரம் நல்லிணக்க செயற்பாடுகளின் முன்னேற்றம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள், அவற்றின் சிபாரிசுகளை பின்பற்ற அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்பன குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை அதிகாரிகளுக்கு அமைச்சர் பீரிஸ் முழுமையாக விபரித்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது

அத்துடன் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, மீள் குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்துள்ளார். இலங்கையில் அமெரிக்க முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழுவில் இடம்பெற ஐ.தே.க. - கூட்டமைப்பு பேச்சு

(கொழும்பு)


தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கான சூழலை உருவாக்குவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பான தமது கட்சியின் யோசனைகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

வடக்கிற்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக நியமிக்கப்படும் தெரிவுக குழுவில் பங்கேற்பது தொடர்பாக அரசாங்கத்திடம் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன, இந்த பேச்சுவார்த்தைகளின் நம்பகத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும், பேச்சுவார்த்தைகளில் வெளிப்படைத் தன்மை காணப்படவேண்டும் அதே போன்று பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலும் கால அட்டவணையும் இருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவிற்குப் பிணை



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நிபந்தனையுடன் பிணையில் விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது, இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற வீரர்களை தங்கவைத் திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சரத் பொன்சேகாவிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கிலிருந்து ஒரு மில்லியன் ரூபா ரொக்கப் பிணையிலும் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் அவரை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. அத்துடன், பொன்சேகாவின் கடவுச்சீட்டினைப் பறிமுதல் செய்யவும் தேவைப்படுமிடத்து அதனை மீளவும் பெற்றுக்

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஜே.வி.பி. பங்குபற்ற மாட்டாது என்கிறார் ரில்வின் சில்வா

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவை நியமிப்பது தொடர்பாக அரசாங்கம் நேர்மையாக செயற்படாததன் காரணமாக அதில் பங்குபற்றாதிருக்க தமது கட்சி தீர்மானித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்காது காலத்தை வீணடிக்கும் முயற்சியாகவே உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை காண்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் அவற்றின் ஊடாக எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச சுயாதீன விசாரணை நடத்த வேண்டிய தேவை இல்லை

### தூதுவர் திசரசமரசிங்க தெரிவிப்பு

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச மற்றும் சுயாதீனமான விசாரணைகளுக்கு எவ்வித அவசியமும் கிடையாது என அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு யுத்தம் தொடர்பான விடயங்களை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும், மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத வகையில் பொது மக்களின் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி படையினர் கடமையாற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சரணடைந்த 11 ஆயிரம் விடுதலைப் புலி

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலை மாணவன் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் தர்ஷானந் (வயது - 24) நேற்றுக் காலை 8.30 மணியளவில் யாழ். கலட்டிப் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். நேற்றுக் காலை பல்கலைக்கழகம் நோக்கி துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தபோது இவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தர்ஷானந் கலைப்பீட இறுதியாண்டு மாணவரும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரும் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரது அலுவலகத்தை முற்றுகையிட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# வீழ்ச்சியடைகிறது கல்வித்தரம் மேம்படுத்த விசேட திட்டம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஒருபாடசாலையின் வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளில் மட்டும் தங்கியிருப்பதில்லை ஒட்டு மொத்த சமூகத்தின் ஒன்றுபட்ட உழைப்பிலும் முயற்சியிலுமே அது தீர்மானிக்கப்படுகின்றது. அத்தோடு வீழ்ச்சி கண்டு வரும் யாழ் மாவட்டத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு விசேட திட்டமொன்று வகுத்து செயற்படுத்தப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையினை திறந்து வைத்து அதன் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தென்மராட்சி பிரதேசத்தை இரு பிரதேச செயலர் பிரிவுகளாக பிரித்து நிர்வகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அச்செயற்பாடு விரைவாக நடைமுறைக்கு வரும. அப்போது இப்பகுதியின் வளர்ச்சியில் பாரிய முன்னேற்றங்கள் எட்டப்படும்.

அந்த சந்தர்ப்பத்திலே கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தை அபிவிருத்தியில் முக்கியத்துவப்படுத்த வேண்டிய கட்டாய நிலைமை உருவாகும். அவ்வாறான சூழலில் இப்பாடசாலை இன்றுள்ளதைவிட பல மடங்குகளாக வளர்ச்சிபெறும்.

வளங்களையும் வசதிகளையும் ஏற்படுத்தித்தர நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் யாழ். மாவட்டத்தின் கல்வித்தரத்தை மீண்டும் நிலைநாட்ட ஒட்டுமொத்த சமூகமும் இணைந்து உழைக்க வேண்டும். இம் மாவட்டத்தில் ஒருசில பாடசாலைகள் மட்டுமே இன்று முன் நிலையில் திகழ்கின்றன. அவற்றின் பின்னணியில் அப்பாடசாலை சமூகத்தின் உழைப்பு முதன்மை பெறுகின்றது.

எனவே ஒருபாடசாலையின் வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளில் மட்டும் தங்கியிருப்பதில்லை. ஒட்டுமொத்த சமூகத்தின் ஒன்றுபட்ட உழைப்பிலும் முயற்சியிலும் அது தீர்மானிக்கப்படுகின்றது. அத்தோடு வீழ்ச்சிகண்டு வரும் யாழ். மாவட்டத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு விசேட திட்டமொன்று வகுத்து செயற்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு இம்மாவட்ட கல்வி சார் அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தினை நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நேற்று முன்தினம் திறந்து வைத்து அதன் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தார்.

யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் நடராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன், திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலய முதல்வர் திருமதி மங்களேஸ்வரன், கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார மற்றும் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசார் அதிகாரிகள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கோட்ட ரீதியான சமூக விஞ்ஞானப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான சமூக விஞ்ஞானப் போட்டிகள் கோட்டரீதியாக இன்று நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

உடுவில் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டிகள் இணுவில் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பளை கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும், சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், சங்கானை கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் வட்டு. இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

போட்டிகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும். தரம் 6,7 மாணவர்களுக்கான போட்டிகள் காலை 9.00 மணிக்கும், தரம் 8,9 மாணவர்களுக்கான போட்டிகள் காலை 10.00 மணிக்கும், தரம் 10,11,12,13 வகுப்புகளுக்குரிய போட்டிகள் முற்பகல் 11.00 மணிக்கும் நடைபெறவுள்ளன.

போட்டியாளர்களுக்கான சுட்டெண்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனை அதிபர்கள் கவனத்திற்கொண்டு போட்டியாளர்களை தயார்படுத்தி போட்டியில் உரிய நேரம் பங்குபற்றச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (06)

# கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சங்கானை கோட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு வெற்றிடம் ஏற்படவுள்ளதால் இவ்வெற்றிடத்தினை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட ஆகக்குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடைய இலங்கை அதிபர் சேவை I அல்லது இலங்கை அதிபர் சேவை 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (அதிபர் சேவை I இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2-I ஐச் சேர்ந்தவர்களிலிருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் திறந்த பாடசாலை அங்குரார்ப்பண வைபவம் கடந்த வாரம் நடைபெற்றிருந்த போது வலிகாமம் வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்திதேவி மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் முறைசாராக் கல்வி செயற்திட்ட அலுவலர்கள் எஸ்.சிவரூபன், வே.அம்பிகை பாகன், ஆசியுரை வழங்கிய குருக்கள் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (06)

# யாழ்.நகரை ஆக்கிரமிக்கும் நடைபாதை அங்காடிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் மீண்டும் நடைபாதைக் கடைகள் தலைதூக்கி விட்டன. யாழ். மின்சார நிலைய நடைபாதை மற்றும் போதனா வைத்தியசாலை கிளினிக் பிரிவின் நுழைவாயில் பகுதிகளின் நடைபாதைகளில் கடைகள் நிறுவ எத்தனித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் கை ரேகை பார்த்து சாத்திரம் சொல்லும் குறவர், குறத்திகள் நடைபாதையை ஆக்கிரமித்து இருக்கை போட்டு சாத்திரம் பார்த்து வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதனால் நடைபாதை வெறிச்சோடி இருக்கும்போது அதனுள் நுழையாத பாதசாரிகள் சுதந்திரமாக வீதிகளில் இறங்கி விடுவதால் வாகனப் போக்குவரத்துக்கு மீண்டும் அப்பகுதி நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

பாதசாரிகள் நடைபாதைப் பகுதிகளில் செல்வதற்கு பழக்கப்படுவதற்கு முன்பாகவே நடைபாதைகள் அங்காடிகளால் ஆக்கிரமிப்பிற்கு உட்படுவதால் அதிகப்படியான மக்கள் சஞ்சரிக்கும் பகுதிகளில் நெருக்கடிகளால் விபத்து மரணங்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (68)

## சிறு செய்திகள்

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி, புதிய நிர்வாகசபைத் தெரிவு ஆகிய விடயங்கள் இடம்பெறவுள்ளன. பழைய மாணவர்களைத் தவறாது சமுகம் கொடுக்கும்படி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (06)

### வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்.நிருபர்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடலும் மதிய போசன விருந்தும் இன்று நண்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் அ.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (10)


# இலவச அழகுக்கலை பயிற்சி



ஒறிபிளேம் [Oriplam] தனது 45 ஆவது வருடத்தை முன்னிட்டு இலவச அழகுக் கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. [facial, gold facial, pedicure, manicure, hairstyle, bridal make up...] செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறிப்பு:- வீட்டிலிருந்தவாறே பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானமாக ரூபா 12000.00 இற்கு மேல் உழைப்பதற்கான வழிகாட்டல் வழங்கப்படும்.

இவ்வறிமுக வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 21.05.2012 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இடம்:- 187/30, யூனியன் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச் சந்தி அருகில், கொட்டடி வீதி)
தொடர்புகளுக்கு:- 0770784428, 0778180450

(C/1502)


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



5 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: திலீப் கானுஜா
முகவரி: நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

2 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: சு.கிருஷ்ணிகா
முகவரி: சுரேந்திரா ஸ்ரோர்ஸ், வற்றாப்பளை.



மனதைத் திறந்து வைத்திரு. நீ அறிந்ததைவிட பெரிய விடயம் ஒன்று இங்கு நடந்துகொண்டிருக்கிறது. -இயன்லா வன்சான்ற்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மன்னிப்போம்! மறப்போம்!

தமிழ்நாட்டின் திராவிட அரசியல் பாரம்பரியத்தில் "மன்னிப்போம்! மறப்போம்!" என்ற சுலோகம் வெகு பிரபலமானது. திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்தபோதும், இந்திய தேசியத் தலைமைகளுடன் பகைமறந்து மாறி மாறிக் கூட்டணி அமைத்துக் கொள்ளும் போதும் திராவிடத் தலைவர்கள் தம் தொண்டர்களிடம் பெருந்தன்மையோடு சொல்லிக் கொள்ளும் வாக்கியம் அது.

அந்தப் பெருந்தன்மையான அரசியல் சுலோகத்தின் மூலமே, வட நாட்டானை விரட்டித் தனிநாடு அமைப்போம் என்ற தீவிர நிலைப்பாட்டை மென்மைப்படுத்தி, மாநில அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர். "வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" என்ற உணர்ச்சிகரக் கோஷங்களைக் கைவிட்டு, "நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக!" என்று இணக்க அரசியலைக் கையிலெடுத்து வென்றார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால், அந்தத் தலைவர்கள், ஈழத் தமிழர்களின் பிரச்சினை என்று வருகிறபோது, "மன்னிக்காதீர்கள்; மறக்காதீர்கள்" என்று பகையுணர்ச்சியை வற்ற விடாமல் பாடம் நடத்துவதுதான்! எவ்வளவு காலத்துக்குத்தான் பகையிலும் ரோசத்திலும் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பது?

ஏன் எங்களால் யாரையும் மன்னிக்க முடியாமல் இருக்கிறது? உடனேயே, மன்னிக்கும்படியான கொடுமைகளையா அவர்கள் செய்தார்கள் என்று உணர்ச்சி பொங்கக் கொதித்தெழும்புவதே எங்கள் 'வீர' இயல்பாக இருக்கிறது. அறிவுபூர்வமாகச் சிந்தித்து மக்களைக் காக்கும் விதமாக யோசிக்க நாம் இப்போது கூட முன்வருவதாயில்லை.

ஒருவேளை, எங்களால் யாரிடமும் மன்னிப்புக் கேட்க முடியாமலிருப்பதுதான், அவர்களையும் எங்களால் மன்னிக்க முடியாதிருப்பதற்குக் காரணமாக இருக்கிறதோ என்னவோ! எங்கள் தரப்பில் செய்த மாபெரும் தவறுகள், அநீதிகள் பற்றி கடைக்கண்ணால் கூட திரும்பிப் பார்க்க நமக்கு விருப்பமில்லை. அப்படிப் பார்த்து நமது குற்றங்களும் இருப்பதாய்ச் சொல்கிறவர்களை, துரோகிகள் என்று இப்போதும் யாராவது போட்டுத் தள்ளிவிட மாட்டார்களா என்ற சிலருக்கு வெளிப்படையான ஏக்கமும், பலருக்கு இரகசியமான ஆசையுமே இருக்கிறது!

நம் தரப்புப் பிழைகளை உணர்ந்து வெளிப்படுத்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவிடுவதன் மூலம்தான், அதுமாதிரியான தவறுகளுக்கு நாம் மீண்டும் போகாமலிருக்க முடியும். அது மட்டுமல்ல, மற்றவர்களும் தங்கள் பிழைகளைப் பேசும் தளர்வான சூழ்நிலை உருவாகும். அதன்மூலம்தான் ரணங்கள் ஆறும்.

பரஸ்பரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் சூழல் உருவானால்தான், பேச்சுவார்த்தை ஆயுதத்தால் நாம் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். சிங்களத்தரப்பு, இந்தியத்தரப்பு, தமிழ்நாட்டுத்தரப்பு, ஈழத்தமிழர்கள் தரப்பு, புலம்பெயர்ந்தோர் தரப்பு என எல்லோருமே மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் சூழலை உருவாக்குவது பற்றியே நம் முயற்சி, பேச்சு, எண்ணம் எல்லாம் அமைய வேண்டும்.

முதலில் நாமே மன்னிப்புகளைக் கேட்க ஆரம்பிப்பதில் என்ன குறைந்துவிடும்? 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்களைத் துரத்தினதுக்கு, பள்ளிவாசலினுள்ளும் மற்றும் இடங்களிலும் கொலைகளைச் செய்ததுக்கு, அநுராதபுரம், அரந்தலாவை, தலதா மாளிகை மற்றும் பொதுஇடங்களில் நடந்த கொலைகள், இந்தியத் தலைவர் கொலை, இன்னுமின்னும் தமிழ்த் தரப்பால் நடந்த கொலைகள் எல்லாவற்றுக்கும் பெரிய மன்னிப்பை, அவரவர்களிடம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமே கேட்க வேண்டும்.

இவ்வாறு மன்னிப்பதன், மறப்பதன் மூலமே நமக்கும் எல்லோருக்குமான நல்வாழ்வுக்கு நாமனைவருமே திரும்ப முடியும். வெறுப்பால் மக்களைத் திரட்டுவதை விட இதற்குத் திரட்டுவது மிகக் கடினமான காரியம்தான். ஆனால், இதைத் தான் நாம் செய்தாக வேண்டும்.

– ஆசிரியர்

# நாடாளுமன்றத் தெரிவுக் குழு; ஜனாதிபதி - ரணில் கடிதப்பரிமாற்றம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் தொடர்ந்தும் கடிதப் பரிமாறல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமையன்று ஐக்கிய தேசியக்கட்சியின் குழுவை ஜனாதிபதியின் தலைமையிலான குழு சந்தித்தது. இதன்போது தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து வருவது குறித்து ஆராயப்பட்டது.

இதன்படி காத்திரமான அடிப்படை அம்சங்கள் அரசாங்கம் ஏற்படுத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு அழைத்து வரமுடியும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்திருந்தது.

இதனையடுத்து, அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று முன்தினம் இரவு தமது நிலைப்பாட்டை விளக்கி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. இதன் பிரதிகளை உடனடியாகவே ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பிக்கு அனுப்பினார்.

இந்த நிலையில், நேற்று ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து அரசாங்கத்தின் கடிதத்துக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தரப்புக்கள் தெரிவித்துள்ளன. அதில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்குமானால் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்தின் உத்தேச நாடாளுமன்றக் குழுவுக்கு செல்லக்கூடும். இல்லையேல் இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் தாமதமாகும் என்று அரசியல் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் சென்று அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை வெளிக்கொணர, தமிழ்த் தேசியக கூட்டமைப்பு முயலவேண்டும் என்று வெளிநாடுகளும் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள இந்து ஆலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 15 ஆலயங்களுக்கு தலா ஒரு இலட்ச ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே அமைச்சினால் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இப்பிரதேசத்திலுள்ள கரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயம், வைக்கோல் குளம் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அன்னமார் ஆலயம், ஸ்ரீ காளி அம்பாள் ஆலயம், மறவன் புலோ ஞான வைரவர் ஆலயம், முதலியனார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கெற்பேலி கறையான் புற்று கந்தசுவாமி ஆலயம், மணற்காடு கந்தசாமி ஆலயம், மணற்காடு கந்தசாமியார் ஆலயம், கொக்கலை விநாயகர் ஆலயம், பெரிய அத்தாய் முத்துமாரி அம்மன் ஆலயம், ஸ்ரீ நாராயணர் ஆலயம், கொடிகாமம் நறுவிழி பத்திர காளி அம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (நி)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே மின்தடை அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக நாளை ஞாயிற்றுக். கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் வீதி அகலிப்புப் பணிகளுக்காக கைதடி, மானிப்பாய் வீதியில் உயரழுத்த மற்றும தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீட பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், தட்டார்தெரு ஆகிய இடங்களிலும், வீதியகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால்

21.05.2012 திங்கட்கிழமை, 23.05.2012 புதன் கிழமை, 25.05.2012 வெள்ளிக்கிழமை மற்றும் 27.05.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய திங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவான், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும்

22.05.2012 செவ்வாய்கிழமை, 24.05.2012 வியாழக்கிழமை மற்றும் 24.05.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து 6.00 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடபிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், ஆகிய இடங்களிலும் 21.05.2012 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6.00 மணிவரை மேற்குறித்த இடங்களுக்கு மேலதிகமாக இணுவில், மருதனார்மடம், உடுவில் சங்குவேலி, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணற்பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## அதிபர்களுடனான அவசர சந்திப்பு

(பருத்தித்துறை)

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களையும் இன்று சனிக்கிழமை காலை 2.30 மணிக்கு சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு புலோலி அ.மி.த.க. பாடசாலை ஆசிரியவள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதால் சகல பாடசாலை அதிபர்களையும் வடமராட்சி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப பணிப்பாளர் நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)

# பொருளாதாரத்தில் பாதக விளைவை ஏற்படுத்த இந்தியா முயற்சி

## குணதாச தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்த இந்தியா முயற்சித்து வருவதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாட்டின் அரசாங்க அதிகாரிகள் சிலர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். சீபா வர்த்தக ஒப்பந்தத்திறகுப் பதிலாக சாட்ஸ் என்னும் மற்றுமொரு ஒப்பந்தத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் பாதக விளைவுகளை ஏற்படுத்த இந்தியா திட்டமிட்டு வருகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளவே இந்தியா விரும்புகின்றது. படிப்படியாக நாட்டின் பொருளாதாரத்தில் ஆதிக்கத்தைச் செலுத்த இந்தியா முயற்சித்து வருகின்றது. ஒருமாத வீசா எடுத்துக்கொண்டு நாட்டுக்குள் பிரவேசித்து நீண்ட காலம் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

சீபா ஒப்பந்தத்தில் செய்து கொள்ள முடியாதவற்றை தற்போது சாட்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்து வருகின்றது என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

# வட்டக்கச்சி பண்ணையில் விவசாயக் கண்காட்சி - 2012



(கிளிநொச்சி)

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் இவ்வருடத்திற்கான "விவசாயக் கண்காட்சி - 2012" இனை ஆகஸ்ட் மாதம் வட்டக்கச்சியில மைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் பாரியளவில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது இடம்பெறறு வருகின்றன.

வடமாகாண அவசர மீள் எழுச்சித் திட்டத்தின் உதவியுடன் உத்தியோகத்தர்களுக்கான இருவிடுதிகள், வேலிகள் மற்றும் தண்ணீர்த் தாங்கி ஆகியன புனரமைக்கப்பட்டு வருகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களமானது பண்ணைக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்கி வருகின்றது.

வடமாகாண ஆளுநர் ஜிஏ சந்திரசிறி வட்டக்கச்சி விவசாயப் பண்ணை மற்றும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டு நடைபெற்றுவரும் வேலைகளைப் பார்வையிட்டார். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பண்ணையைச் சுற்றி வேலி அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்துவதுடன் சேதமடைந்த கட்டடங்களை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

இதன்போது வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹல்டீன், மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் ஏ. செல்வராஜா, மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.சிவபாதம், பிரதிப் பணிப்பாளர் எந்திரி எஸ். சுதாகரன், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் மாவட்ட விவசாயத் திணைக் களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருநகர் மயான வீதிக்கு மின்சார விநியோகம்



படம்: கலையகன்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகர் மயான வீதி மக்களுக்கு மின்சார விநியோகம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் மீள்குடியேறி நீண்ட காலமாக மின்சார விநியோகம் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் மின்சார சபையால் தூண்கள், போடப்பட்ட நிலையில் மின்சாரம் வழங்கப்படாமல் இருந்தது.

இதனால் இக்கிராம அபிவிருத்தி சங்கம் பலதரப்பினரிடமும் மின்சார விநியோகம் தொடர்பாக முறையிட்டதை அடுத்து கிளிநொச்சி மின்சார சபையால் மின்சாரம் இக்கிராம மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கிராம மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதுடன், மின்சார சபையினருக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(ஜெ)

# பூக்களுடன் கன்னி கவிதை நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

இந்துவின் இளங்கவிஞன் உமாவின் "பூக்களுடன் கன்னி" கவிதை நூல் அறிமுகவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை காலை 11.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யூ.ஆர். பௌணடேசன் நிறுவனத் தலைவர் க.செவ்வேள், சிறப்பு விருந்தினர்களாக இராமநாதன் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் திருமதி வை.கணேசபிள்ளை, யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

"கண்ணீர் பூக்கள்" ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி, "கன்னி" ஆய்வுரை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஆசிரியர் பா.மகாலிங்கசிவம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# ஊர்காவற்துறை பிரதேச சபையில் புத்தக தின இறுதி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நூலக வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் ஊர்காவற்துறை பிரதேச சபையின் நூலக வாரமும் உலக புத்தக தின இறுதி நாள் நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்துறை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் திருமதி எ.அனரன யோகநாயகம், சிறப்பு விருநதினராக யாழ். பல்கலைக்கழக கல்வி சார் நூலகர் அருளானந்தம், ஸ்ரீ காந்தலக்ஷி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூலக வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

சுவரொட்டிப் போட்டி

செ.பத்மபிரியா, தொ.வயலட் ரஞ்சிதா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), ச.சதீஸ்குமார் (புனித அந்தோனியார் கல்லூரி).

ஆறுதல் பரிசு

உ.துஸ்யந்தன் (அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), டி.டி.சாந்தன் (நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), சு.கிருபாகரன் (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்).

சஞ்சிகை ஆக்கம்

கீழ்ப்பிரிவு

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாயலம்.

மத்திய பிரிவு

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், புனித அந்தோனியார் கல்லூரி.

மேற் பிரிவு

கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாயலம்.

# வெடிக்காத வெடிபொருட்கள் விழிப்புணர்வுச் செயலமர்வு

552 ஆவது படையணித் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வெடிக்காத வெடிபொருட்கள் காரணமாக ஏற்படும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல மர்வொன்று கடந்த 11 ஆம் திகதி புலோப் பளை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டவர்களுக்கு வெடிக்காத வெடி பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கவுரையும் அவ்வாறான சந்தேகத்துக்கிடமான பொருள்களைக் கண்டால் செயற்பட வேண்டிய முறை பற்றிய தெளிவுபடுத்தலும் 10 ஆவது பொறியியல் துறைப் பிரிவின் அதிகாரிகளால் வழங்கப்பட்டது.

மேலும் தேசிய நூலக மற்றும் ஆவணங்கள் சேவை சபையின் அனுசரணையில் 552 ஆவது படையணித் தலைமையகத்தினால் அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் அனைத்து நூலகங்களுக்கும் தமிழ்மொழியிலான புத்தகப் பொதிகள் ஒவ்வொன்று வீதம் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்ட புத்தகப் பொதி புலோப்பளை RCTM கல்லூரிக்கு அன்றைய தினம் 552வது படையணித் தலைமையகத்தின் தளபதி கேணல் தீபால் வன்னியாராய்ச்சியால் வழங்கப்பட்டது.

# படகுகள் பதிவு விசேட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பதிவுகளுக்குட்படாது சுமார் 175 பிளாஸ்ரிக் படகுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக யாழ். கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்கு சுமார் 300 படகுகள் மொத்தமாக இருக்கின்ற போதும், அவற்றில் 125 படகுகளே முறைப்படியாக தமது திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

நெடுந்தீவுப் பகுதியிலுள்ள கடற்கலங்களின் பதிவுகளை சீர் செய்வதற்கு யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் நெடுந்தீவுக்கு விஜயம் செய்திருந்த போதே இந்தத் தகவல் தெரிய வந்திருக்கிறது.

தற்சமயம் அங்கு பதிவில் உள்ள 175 படகுகளுக்கும் இலககம் பொறிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் பதிவில் இல்லாத படகுகளின் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு வெலி ஓயா பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டமொன்று எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு வெலி ஓயா மகாவலி பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.கணரத்தின வீரகோன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அரச அதிபர், பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (04)



**சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலர் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையுரை நிகழ்த்துவதையும், அருட்பணி எஸ்.ஜே.இராசநாயகம் விடயம் பற்றி விளக்கமளிப்பதையும் காணலாம். (105)**

# மண்டைதீவுக்கு மின்சாரம்?

# பிரதேச மக்கள் ஆதங்கம்

(மண்டைதீவு)

மண்டைதீவு பிரதேசத்திற்கு இதுவரை மின்விநியோகம் வழங்கப்படாததால் தாம் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து பின்னர் மீள் குடியேறி நீண்டகாலமாகியும் இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் நாம் மண்ணெண்ணெய் விளக்கில் வாழ்ந்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாணவர்கள் கல்வி கற்க முடியாது நகரப் பகுதிகளுக்குச் சென்று தங்கியிருந்து கல்வி கற்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இதனால் வீண்விரயங்கள் அதிகம் ஏற்படுவதாகவும், இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்திற்கான மின்சார விநியோகம் தொடர்பில் பல தரப்பினரிடமும் பல தடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மேலும் தீவுப்பகுதியில் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளுக்கும் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் எமது பிரதேசத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமை வேதனையளிப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மின்பிறப்பாக்கிகள் மூலமாவது எமது பிரதேசத்திற்கு மின்சார விநியோகத்தை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (85)



வடக்கின் வசந்தம் திட்டத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் பல மில்லியன் ரூபா செலவில் பூநகரி வாடியடியில் கட்டப்பட்ட பிரதம தபால் கந்தோர் வேலைகள் முடிவுற்ற நிலையில் காட்சி அளிப்பதை படத்தில் காணலாம்.

தற்போது தனியார் ஒருவரின் சிறிய அறையில் எவ்வித வசதிகளுமற்ற நிலையில் தபால் அதிபரும் ஊழியர்களும் சிரமத்தின் மத்தியில் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. (112)

## யாழ். சமுர்த்தி மகா சங்கத்தின் சிறுவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கம் சமுர்த்தி வங்கிகளூடாக இணைந்து சமுர்த்தி சிறுவர் கழகங்களிடையேயான கலாசார மற்றும் இலக்கியப்போட்டிகளை நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் 5 - 9, 10 - 14, 15 - 18 வரையான வயது அடிப்படையில் தனிநபர் பாடல் (பெற்றோரை பாராட்டும் பாட்டு), நாட்டார் பாடல்கள், கிராமிய பாடல்கள், அறுவடைப்பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், கிராமிய நடனங்கள் (கூட்டு), அம்மன் கூத்து, காவடி, கோலாட்டம், அறிவிப்பாளர் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, சிறுவர் கதைகள், குறுநாடகம் (மதுவுக்கு முற்றுப் புள்ளி) போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதில் வலய மட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும், பிரதேச மட்டம் எதிர்வரும் ஜுன் 30 ஆம் திகதியும், மாவட்டமட்டம் ஜுலை 20 ஆம் திகதியும், தேசிய மட்டம் ஆகஸ்ட் 29, 30 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்.நகர் சமுர்த்தி வங்கி (021 222 0782), யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கி (021 222 0783), சமுத்தி மகா சங்கம் (021 222 4520) ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு போட்டி முடிவு பற்றி விபரங்களை அறிந்து கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் தரிப்பிடம் அமைக்க தீர்மானம்; நிறைவேற்றுவதில் பிரதேச சபை அசமந்தம்

(பூநகரி)


பூநகரி வாடியடிச் சந்திப்பகுதியில் பஸ்தரிப்பிடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருப்பதால் தொடர்ச்சியாக மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி மகாவித்தியாலயத்தில் படிக்கும் மாணவர்களில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை விட்டதும் பஸ்தரிப்பிடம் இன்றி கடை ஓரங்களிலும் வெய்யிலிலும் காத்து நின்றே பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இம்மாணவர்களினதும் பொதுமக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு அனைவரும் நின்று பயணத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்கான தீர்மானம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் பூநகரிப் பிரதேச சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும் இதற்கான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படாமை பற்றி பாடசாலைச் சமூகம் அதிருப்தி தெரிவிக்கின்றது.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பூநகரி பிரதேச சபை நிர்வாகத்தினர் துரித நடவடிக்கை எடுத்து மழைகாலம் ஆரம்பிக்கும் முன்னதாக பஸ்தரிப்பிடத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாணவர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (112)

## பரமர் சங்கமம்



வடபகுதி இளைஞர் மத்தியில் மொழி, இனம் சார்ந்த உணர்வு பூர்வம் வளர்ந்து மீட்சிக்கான போராட்டப்பக்குவம் வளர்ச்சியடைந்து வருகையில் பிளவுகள் வெடித்தன.

இதனால் ஐந்திற்கு மேற்பட்ட அமைப்புக்கள் தோன்றின. இவர்கள் என்ன நோக்கத்திற்காக அணிதிரண்டனரோ அந்தப் பொது எதிரிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத சமனான நடவடிக்கைகளை ஒவ்வொருவரையும் அழித்தொழிப்பதில் எடுத்துக் கொண்டனர்.

எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதியிலும் முளைவிட்ட இந்நிலைமை காலப்போக்கில் அதிகரித்தது. இதனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த படுகொலைகள் ரெலோ அழிப்பு நிகழ்வில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள்ளும் இந்த அராஜகம் அரங்கேறிய அநாகரீகம் மட்டுமல்ல கந்தன் கருணைப் படுகொலை எனத் தொடர் கதையானது.

இந்த வரிசையில் தான் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியான 2006 ஆம், 2008ஆம் வருடங்களில் மட்டும் 417 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பதான தகவலும் அடங்குகின்றன.

எண்பதுக்கும் 2006 கும் இடைப்பட்ட 25 வருடங்களிலும் அவ்விதம் படுகொலைகள் செய்யப்பட்ட தொகை எவ்வளவாக இருக்கும் என்பது கேள்வி. அதற்கும் தரவுகள் பதிவாகியிருக்கலாம்.

இத்தனை கொலைகளும் துப்பாக்கிச் சூட்டால் நிகழ்ந்ததாகவும், கொலையாளிகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் அந்தத் தகவல் கூறுகின்றது.

என்றால் அக்காலங்களில் அடிக்கடி அரங்கேறி வந்த இனந்தெரியாதோரின் படுகொலைச் செயற்பாடுகளாக அவை இனங் காணப்படுகின்றன.

காட்டிக் கொடுத்தல், பகை முடித்தல், பழிக்குப்பழி, இனத்துரோகம் இழைத்தல், இன்னோரன்ன காணங்களால் அப்படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வரலாறு மூன்று வருடங்களின் முன்பு முடிவுக்கு வந்த யுத்தத்துடன் நின்று விட்டதா?

கடந்த 2011 ஆம் ஆண்டு வெசாக் தினத்தன்று இரவு யாழ் - நீராவியடி ரயில் பாதை வீதியில் தனது சொந்த வீட்டில் இருந்த கல்வி விரிவுரையாளர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்தேறியது.

அந்தப்படுகொலைச் சம்பவத்தின் பின்னணி கூட இதுவரை வெளிச்சத்துக்கு வராமல் மறைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் ராஜபாதை வீதியில் ஆணும் பெண்ணும் தூக்கில் தொங்கப் போட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்விதம் குடாநாட்டில் பல படுகொலைகளின் பின்னணிகள் இதுவரை ஆராயப்படாமல் துப்புத் துலக்கப் படாமல் தூங்கப் போடப் பட்டுள்ள நிலமை எதனைக் காட்டுகின்றது?

ஓட்டைகள் உடுபுடவை, பாத்திரங்களில் மட்டுமல்ல சட்டத்திலும் விழுந்து வருவதைக் காட்டுகிறதல்லவா?

## பொதுக்கூட்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் குடமுழுக்கு விழா தொடர்பான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஆவணி மாதம் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் இது குறித்து கலந்துரையாடுவதற்கு சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## படை அதிகாரி மக்களுடன் சந்திப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச மக்களை 68 ஆவது பிரிகேடியர் கே.ஸ்ரீ.விஜயதிலக இரணைப்பாலை மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து மீள் குடியேறியுள்ள மேற்படி பிரதேச மக்களின் வசதிகள், தேவைகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடினார்.

வீட்டுத்திட்டம், மக்களின் குடிநீர் வசதி, மலசலகூட வசதி, கிணறு, வீதிப்புனரமைப்பு, உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் குறித்து மக்களிடம் கேட்டறிந்தார். (04)

## முரசின் இன்றைய பலன்

(19.05.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 06 ஆம் திகதி. சதுர்த்தசி பின்னிரவு 3.44 வரை.
நட்சத்திரம் அச்சுவினி. காலை 07.58 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 08.52 - 10.22 வரை. சுபநேரம் 2.52 - 4.22 வரை.
எமகண்டம் 1.22 - 2.52 வரை. குளிகைகாலம் 5.52 - 7.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிலும் தாராளம், குடும்பத்தில் சந்தோசம், அன்னியரால் செலவு, திட்டமிட்டுச் செயலபடவும். |
| ரிஷபம் | கவலைகள் அதிகம், கேட்டதெல்லாம் கிடைக்கும், தொழில் துறையில் கூட்டாளிகள். |
| மிதுனம் | வீண் செலவீனம், பொன் பொருள் சேரும், தேவைக்கு மேல் பணவரவு, உற்சாகம். |
| கடகம் | தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி, நீண்டகால ஆசைகள் நிறைவேறும். |
| சிம்மம் | சுயதொழிலில் முன்னேற்றம், முட்டுக்கட்டைகள் நீங்கும், வெளிநாட்டு வாய்ப்பு, சோர்வு. |
| கன்னி | பிரயாணம் தவிர்க்கவும், திருமணம் நிறைவேறும், பொன்பொருள் சேரும், உதவிகள். |
| துலாம் | பொறுமை நன்று, பணியில் சாதுர்யம், குடும்பத்தில் மகிழ்ச்சி, ஆடை ஆபரண சேர்க்கை. |
| விருச்சிகம் | பகைவரால் தொல்லை, நண்பர்களால் உதவிகள், வீடு, வாகனச் சேர்க்கை, காரியனுசூலம். |
| தனுசு | தெழிலில் உயர்வு, உறவினர் வருகை, வர்த்தகத்தில் இலாபம், திருமணம் கைகூடும். |
| மகரம் | வெற்றிகள் குவியும், வேலை வாய்ப்பு வரும், தொழில் துறையில் ஸ்திரம், திடீர் தனவரவு. |
| கும்பம் | பணவரவுகள், உறவினரால் செலவு, பெற்றோர் ஆதரவு, விழிப்புணர்வு அவசியம். |
| மீனம் | மறைமுக எதிப்புக்கள், தொலைதூர இடமாற்றம், குடும்ப முன்னேற்றம், தொல்லைகள் தீரும். |

# சர்வதேச தரப்படுத்தலில் கண்டி மாணவன்



சர்வதேச சதுரங்க தரப்படுத்தலில் கண்டியைச்சேர்ந்த கிருபாகர் ஹரி கிஷன் இளம் வயதில் இடம்பிடித்துக் கொண்டார்.

கண்டி திருத்துவ கல்லூரியில் 8 ஆம் தரத்தில் கல்வி பயிலும் இவர் இரண்டரை வயதிலிருந்தே சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்று வருகின்றார்.

நாட்டில் பல பாகங்களிலும் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்ற ஹரிகிஷன் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டார்.அதுமட்டுமன்றி சர்வதேச ரீதியில் இந்தியா மற்றும் போலந்தில் நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றியீட்டி சான்றிதழ்களையும் தனதாக்கி கொண்டார். புதுடில்லியின் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச தரப்படுத்தல் போட்டியில் முதன் முதலாக காலடி எடுத்துவைத்துக்கொண்ட இலங்கையை சேர்ந்த இளம் வயது சதுரங்க வீரனான இவர் அம்பலாங்கொடையில் கடந்த வாரம் நடைபெற்ற போட்டியில் ஆறு போட்டியாளர்களை எதிர்கொண்டு அதில் வெற்றியீட்டி இலங்கையில் இருக்கின்ற சர்வதேச தரப்படுத்தல் வீரர்கள் 592 பேரில் இளம் வயது வீரனாக தனது பெயரையும் இணைத்துக்கொண்டார்.

# சாதனை வீரர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் உயரம் பாய்தலில் சாதனை நிகழ்த்திய வீரருக்கு வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் உபஅலுவலகத்தில் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் இ.செந்தூரன் 192 சென்ரி மீற்றர் உயரத்தினைத் தாண்டி புதிய சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன் 2004ஆம் ஆண்டு 191 சென்ரிமீற்றர் சாதனையாக ஏற்படுத்தப்பட்டு அதே உயரம் 2007ஆம் ஆண்டு வேறொருவரினால் சமன் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாண ஆளுநரினால் வடமாகாணத்தில் விளையாட்டுதுறையை மேம்படுத்த பல்வேறு வகையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்திட்டங்களின் விளைவாக வட மாகாண வீர வீராங்கனைகள் தேசிய ரீதிய பல சாதனைகளை அண்மைக்காலங்களில் ஏற்படுத்தி வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

இச்சந்திப்பின் போது மாணவனுடன் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஏ.அண்ணாத்துரை, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.





# திட்டவில்லை

(மும்பை)

நான்போதையில் காவலர்களை தகாத வார்த்தையில் திட்டவில்லை. எனது குழந்தைகளைப் பிடித்துத் தள்ளியதாலேயே இவ்வாறு நடந்து கொள்ள நேர்ந்தது என ஷாருக்கான் தெரிவித்தார்.

வாங்கடே மைதானத்தில் நடந்த சம்பவம் குறித்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஷாருக்கான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைத் தடுத்து நிறுத்தி தள்ளியதால் கோபம் அடைந்தேன். ஆனால், நிச்சயமாகபோதையில் இல்லை.ஒன்றும் அறியாத குழந்தைகளை பிடித்து தள்ளியதால் ஆத்திரப்பட்டேன். அதனால்தான் தகாத வார்த்தையில் திட்ட நேரிட்டது. எனது நடத்தையில் எந்த தவறும் இல்லை. இதற்காக அவர்கள் தான் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்வாறு ஷாருக் கூறியுள்ளார்.

# கிறிஸ் கெய்ல் அதிரடிச் சதம் பெங்களூர் சிறப்பான வெற்றி

(பெங்களூர்)

இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் டில்லி டெயார்டெவில்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் அதிரடி வெற்றியைப் பெற்றுக்கொண்டதன் மூலம் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி அதிகரித்துக்கொண்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, கிறிஸ் கெய்ல் மற்றும் விராத் ஹோலியின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் ஒரு விக்கட்டை மாத்திரம் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன் பிரகாரம் இம்முறை இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் அணி ஒன்று பெற்றுக்கொண்ட அதிகூடிய ஓட்டமாக இது கருதப்படுகின்றது.

இரசிகர்கள் எதிர்பார்த்ததை போன்று அதிரடியாக துடுப்பெடுத்தாடிய கிறிஸ் கெய்ல் 13 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். விராத் ஹோலி 73 ஓட்டங்களைப் பெற்றார். இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைப்பாட்ட மாக 204 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு 216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டெயார்டெவில்ஸ் அணி 20 ஓவர்களில் ஒன்பது விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இறுதிவரை போராடிய டில்லி டெயார்டெவில்ஸ் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ரொஸ் டெய்லர் 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சகீர்கான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியின் சிறப்பாட்டக் காரராக சதம் பெற்றுக் கொண்ட கிறிஸ் கெய்ல் தெரிவானார்.

ஆட்டநாயகன் வென்றமை குறித்து கருத்துத் தெரிவித்த கிறிஸ் கெய்ல், ஐ:பி.எல். தொடரில் மூன்றாவது சதம் அடித்தது மகிழ்ச்சி. இருப்பினும் முதல் நான்கு அணிகளுள் ஒன்றாக எமது அணியில் உள் நுழைவேஎமது நோக்கம் என்றார்.

# மூன்றாவது சுற்றில் பெடரர், ஜோகோவிச்

(ரோம்)

ரோமில் நடைபெறும் இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் ஆடவர் ஒற்றையர் 3ஆவது சுற்றுக்கு ரோஜர் பெடரர், ஜோகோவிச் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

ஆர்ஜென்ரீனா வீரர் கார்லோஸ் பெர்லோககை பெடரர் 6 - 3, 6 - 4 என்று வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெர்னாட் டோமிககை 6 - 3, 6 - 3 என்ற நேர் செட்களில் வீழ்த்திய ஜோகோவிச் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் நடால் ஜெர்மனி வீரர் பிளோரியன் மேயரை 6 - 1, 7- 5 என்ற செட்களில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே, டேவிட் நல்பாண்டியனை வீழ்த்த கடுமையாக போராடினார்.

கடைசியில் 6 - 1, 4 - 6, 7 - 5 என்ற செட்களில் வீழ்த்தினார் முர்ரே.

இதேவேளை, இப்போட்டித் தொடரில் கிண்ணம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக ஜோகோவிச் தெரிவித்தார்.

கடந்த தொடர் தோல்வி அடைந்தது பெரும் ஏமாற்றமாக அடைந்தது. இருப்பினும் இத்தொடரில் கிண்ணம் வெல்வதன் மூலம் அது ஈடு செய்யப்படும். ஆனாலும் அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



# விரைவில் களமிறங்குவேன்

## யுவராஜ்சிங் நம்பிக்கை

(சண்டிகார்)

இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்தில் களம் திரும்ப முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார்.

தற்போது சிறந்த நிலையை அடைந்து வருகின்றேன். புதிய உத்வேகம் கொண்ட மனிதன் போல் உள்ளேன்.

மீண்டும் சர்வதேச போட்டிகளுக்குத் திரும்ப குறைந்தது மூன்று அல்லது நான்கு மாதங்கள் போதும் என்று எண்ணுகின்றேன். வருடக் கணக்கில் இது நீடிக்காது என்று நம்புகின்றேன்.

இந்தத் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் புனே அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. இருப்பினும் பின்னர் அதன் ஆட்டம் படுமோசமாக அமைந்து விட்டது. துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான முறையில் செயற்படாததே புனே அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. ஆனால், கங்குலி அணியை சிறப்பானமுறையில்வழி நடத்தினார். அவர் போன்றஅனுபவ வீரர்களுடன் நான் விளையாட முடியாமறபோன போது ஏமாற்றமே எனத் தெரிவித்தார்.

# "பிளே ஒப்" விளக்கம்

(புதுடில்லி)

ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் பிளே ஒப் சுற்றின் ஆட்டமுறை குறித்த விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் லீக் சுற்றின் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிளே ஒப் சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்த சுற்றில் முதல் மற்றும் 2ஆவது இடத்தை பிடித்த அணிகள் மோதும் போட்டியில் (குவாலிபயர் 1) வெற்றி பெறும் அணி, நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

தோற்கும் அணிக்கு இன்னும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. 3ஆவது மற்றும் 4ஆவது இடத்தை பிடிக்கும் அணிகள் மோதும் போட்டியில் (எலிமினேட்டர்) வெற்றி பெறும் அணியுடன் அந்த அணி மோத வேண்டும்.

இதில் (குவாலிபயர் 2) வெற்றி பெறும் அணி. இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

இந்த அடிப்படையிலேயே போட்டிகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பிளே ஒப் சுற்றுக்கு முதல் தெரிவான அணி என்ற சிறப்பை சேவாக் தலைமையிலான டில்லி டெயார்டெவில்ஸ் அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்தியத்தீவுகள் தடுமாற்றம்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் புரோட், அன்டர்சன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது மேற்கிந்தியத்தீவுகள் அணி தடுமாறி வருகின்றது

மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முத லில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி புரோட், அன்டர்சன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது மளமளவென விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இருப்பினும் சந்தர்போலின் நிதானமான ஆட்டத்தின் மூலம் கௌரவமான நிலையை அடைந்துள்ளது. இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சந்தர்போல் 172 பந்துகளைஎதிர்கொண்டு 12 பவுண்டரிகளுடன் 87 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். மற்றும் சாமுவேல்ஸ் 31, பரத் 42, எம். பிராவோ 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புரோட் 72 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அன்டர்சன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஹொக்கியில் சம்பியனானது



படப்பிடிப்பு: சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனானது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் கடந்த 14ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் தெல் லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யூனியன் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி யும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகியதிலிருந்து நிறைவடையும் வரை ஆதிக்கம் செலுத்திய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணி என்பதால் இப்போட்டி பார்வையாளர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதேபோன்று இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் சிறப்பானதொரு கோலைப் போட்ட யாழ்ப் பாணக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணி யும் மோதின. இதில் சமநிலை உடைப்பு மூலம் யாழ். மத் திய கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (20)

## கோலூன்றலில் 2ஆம் இடம்



(கொழும்பு)

தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியின் கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி யின் வீரர் இரண்டாமிடத்தைப் பிடித் துக் கொண்டார்.

54ஆவது தேசிய கனிஷ்ட விளை யாட்டு விழா கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் 19 வயதுப் பிரிவினருக்கிடை யிலான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மகாஜனாக் கல்லூரி வீரர் அ. அன்ரனிஸ் பிரசாத் 3.50 மீற்றர் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இவரை பாடசாலை சமூகம் பாராட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

விளையாட்டுச் செய்திகள்

## 47ஆவது ஆண்டு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி மாதர் கிராம அபி விருத்திச்சங்கமும் முகாமைத்துவக்குழுவும் இணைந்து நடத்தும் பாலர் பாடசாலை யின் 47ஆவது ஆண்டு விளையாட்டுவிழா இன்றைய தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சித்தங்கேணி பிள்ளையார் ஆலய வீதிமுன்றலில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலை வர் திருமதி அஜிதா சிவகரன் தலைமையில் நடைபெறும்இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலா திருமதி ஏ.சோதிநாதன், கௌரவ விருந் தினர்களாக சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக் கள், பிரம்மஸ்ரீ நா.கமலநாதசர்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இன்றைய காலிறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையேயான 30 ஓவர் களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி யின் காலிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழக மும் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்ளவுள்ளன.

இதேவேளை பகல் 1.30 மணிக்கு ஆரம்ப மாகவுள்ள போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்ளவுள்ளன.

## நவீன பாணியில் புனரமைப்பு துரிதம்



பல வருடங்களாகத் தாமதித்து வந்த சுகததாச விளை யாட்டரங்கு நவீன மயப்பணிகள் துரிதமாக மேற்கொள் ளப்பட்டுள்ளன. விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந் தானந்த அளுத்கமகேயின் பணிப்பின் பேரில் இப்பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டன.

சர்வதேச தரத்துக்கு ஏற்ப விளையாட்டரங்கின் ஓட்டப் பாதை, நீச்சல்தடாகம் ஆகியவற்றின் நிர்மாணிப்பணிகள் ஐந்து மாதங்களுக்குள் பூர்த்தி பெற்றுள்ளன.

15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டு விழாவை இலக்கு வைத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிர்மாணப் பணிகளை அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார். ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியை சிறப்பாக நடத்த இலங்கை எதிர்பார்த்துள்ளது. வெளி நாடுகளில் இருந்துவரும் விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் தேவையான சகல வசதிகளும் செய் யப்படுமென சுகததாச விளையாட்டரங்கின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி 2ஆவது சுற்றில் வென்ற அணிகள்

### இன்று மறுமலர்ச்சி, வளர்மதி மோதல்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 15ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு கைதடி குமரநகர் அணியும், தாவடி காளி அம்பாள் அணியும் தகுதி பெற்றுள்ளன.

இப்போட்டிகள் மின்னொளியில் கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டி ஒன்றில் இணுவில் அண்ணா அணியும், கைதடி குமரநகர் பி அணியும் மோதின. இதில் சிறப்பாக விளையாடிய கைதடி குமரநகர் பி அணி 10-6 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் தாவடி காளி அம்பாள் அணியும், மயிலிட்டி கண்ணகி அணியும் மோதின. இதில் தாவடி காளி அம்பாள் அணி 11-1 என்ற பழம் அடிப் படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன் னேறியது.

இதேவேளை, இன்றைய போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணியும், கைதடி குமரநகர் ஏ அணியை எதிர்த்து கைதடி சித்தி விநாயகர் அணியும் மோதவுள்ளன.

அதேவேளை, நாளைய போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணியும், உடுவில் ஆலடி சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி அடுத்த மாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## வவுனியா பாடசாலைகளின் கரப்பந்து முடிவுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டப் பாடசாலை களுக்கிடையேயான இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் முடிவுகள் வெளியாகியுள் ளன.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி யாலய மைதானத்தில் அண்மையில் நிறைவடைந்த இப்போட்டி வயது அடிப்படையில் இடம்பெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண் களுக்கான போட்டியில் முதல்ாமி டத்தை சிறிசுமண மகாவித்தியாலயமும், இரண்டாமிடத்தை பரக்கும் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலையும் பெற் றுக் கொண்டன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை செட்டி குளம் மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை முதலியார்குளம் றோ.க.த. பாடசாலையும், மூன்றாமி டத்தை பரக்கும் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.


19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை புதுக் குளம் மகாவித்தியாலயமும், இரண்டா மிடத்தை வவுனியா இந்துக் கல்லூரி யும், மூன்றாமிடத்தை தர்மபாலா வித்தியாலயமும் பெற்றுக் கொண் டன.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை கிடாச் சூரி அ.த.க. பாடசாலையும், இரண்டா மிடத்தை தர்மபாலா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை சின்னடம்பன் பாரதி வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை சிறிசுமண மகாவித்தியாலயமும், இரண்டா மிடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலை யும், மூன்றாமிடத்தை தர்மபாலா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலையும், இரண்டாமி டத்தை றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (12)

# கிளிநொச்சியில் பல்கலைக்கழக பீடங்கள்: தமிழ் மக்கள் கனவு நனவாக வேண்டும்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்தப் பீடங்களை அமைப்பதற்கான பௌதீக வளப் பிரச்சினையையும் விட, மன நிலையிலுள்ள பிரச்சினைகளே இங்கே பாதகமாக உள்ளன.



\- கிருணமூர்த்தி அரவிந்தன்

வன்னிப் பிராந்தியத்தின் பாடசாலைக் கல்விப் பிரச்சினைகள் ஒருபக்கம் இருக்க, இன்னொரு பக்கத்தில் அங்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடம், விவசாய பீடம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

ஏற்கனவே கிளிநொச்சியில் இயங்கிய விவசாய பீடம் யுத்தத்தின் காரணமாகவே யாழ்ப்பாணத்துக்குச்சென்றது. யுத்தம் முடிந்து, மீள் குடியேற்றம் நடைபெற்று, மக்கள் தங்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்பி வருகின்றபோதும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாய பீடத்தை கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதற்கு இன்னும் பல்கலைக்கழக நிர்வாகம் முழுஅளவில் முயற்சிக்கவில்லை.

இணைப்பு நிலையில் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழகத்தை கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதற்குப் பல பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் ஒன்று பௌதீக வளப்பற்றாக்குறை. இதுவே முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இந்தப் பௌதீக வளப் பற்றாக்குறை என்பது தனியே பல்கலைக்கழத்திற்கு மட்டுமே உரித்தான ஒன்றல்ல. வன்னியில் யுத்தத்திற்குப் பின்னர் இயங்கி வரும் அத்தனை அரச நிறுவனங்களும் மக்களும் மக்கள் அமைப்புகளும் பெரும் பற்றாக்குறைகளின் மத்தியிலேயே இயங்கி இன்று நிமிர்ந்திருக்கின்றன. அல்லது வளர்ந்து வருகின்றன.

இதை மிக அருமையாக, உயர் கல்வி அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்திருந்தார் கிளிநொச்சிமாவட்டக் கல்வி அபிவிருத்திப் பேரவையின் முக்கியஸ்தரும் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் அத்தியட்சகருமான மருத்துவக் கலாநிதி எஸ். சத்தியமூர்த்தி. அவர் கூறும்போது, எல்லா வளங்களையும் உருவாக்கி விட்டுத்தான் பல்கலைக் கழகத்தை இயங்க வைப்பது என்பது மிகக் கடினமான காரியம். அது இப்போதைக்குச் சாத்தியப்படக்கூடிய ஒன்றுமல்ல. பதிலாக அடிப்படை வளங்களை உருவாக்கிக் கொண்டு, அதிலிருந்தே பணிகளை ஆரம்பித்துச்செயற்படும் வேளையில் ஏனைய வளங்களைப் பெற்றுக் கொள்வது சாத்தியமானது. அதுவே பொருத்தமானதும் கால தாமதத்தைக்குறைத்து வெற்றியைத் தரக்கூடியது என்று.

இந்தக் கூற்று உண்மையானது. இதுவே பொருத்தமானதும்கூட.

மீள் குடியேற்றம் என்பது பற்றாக்குறைகளின் மத்தியிலேயே நடைபெற்றது. மீள் குடியேற்றப்பகுதிகளில் இயங்கிய மருத்துவமனைகள் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையிலேயே செயற்பட்டன. ஆனால், இப்பொழுது அவை எவ்வளவோ தூரம் மேம்பாடடைந்துள்ளன.

செயற்படத் தொடங்கும்போது தேவைகளை நிறைவேற்றும் வேகமும் அதிகரிக்கிறது என்பது பொது விதி. அந்த விதிக்கேற்ப இந்த மாற்றம் ஏற்பட்டது. இப்படித்தான்வன்னிப் பிராந்தியப் பாடசாலைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் பிற அரச திணைக்களங்களின் செயற்படு முறையும் அமைந்திருந்தன.

ஆனால், இங்கே பிரச்சினை வேறு கோணத்திலேயே காணப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்தப் பீடங்களை அமைப்பதற்கான பௌதீக வளப்பிரச்சினையையும்விட,மன நிலையிலுள்ள பிரச்சினைகளே இங்கே பாதகமாக உள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து விவசாய பீடத்தை மீண்டும் வன்னிக்குக்கொண்டு செல்வதற்கு அரசியல் மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதனுடன் சம்மந்தப்பட்ட நிர்வாகிகள், ஊழியர்கள் மட்டத்தில் ஏராளம் தயக்கங்கள் உள்ளன.

தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி, மின்சாரம், குடிநீர் போன்றவற்றின் வசதி எனப் பலவற்றை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் இப்பொழுதிருப்பதையும் விட மிக நெருக்கடியான சூழலில் 1990களில் கிளிநொச்சியில் விவசாய பீடம் இயங்கியது என்பது நினைவு கொள்ளத் தக்கது.

ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வருவதற்கான எல்லாப் பாதைகளும் மூடப்பட்டிருந்த நிலையில் கிளாலி மூலமாக கடல் வழியே படகிற் பயணித்தே மாணவர்களும் கிளிநொச்சிக்குச் சென்றனர். அவ்வாறே விரிவுரையாளர்களும் கிளிநொச்சிக்குப் போயினர்.

இன்று நிலைமை அத்தனை இறுக்கமானதல்ல. வளங்களின் பற்றாக்குறை பெரிதாக இருந்தாலும் ஏனைய விடயங்களில் முன்னேற்றமுண்டு. போக்குவரத்து, மின்சாரம் போன்றவற்றிற் பிரச்சினையே இல்லை. ஆகப் பிரச்சினையாக இருப்பது தங்குமிடம் மட்டுமே.

பீடங்களுக்கான கட்டிட வசதிகள் கூடப்பெருமளவுக்கும் உள்ளன என்றே சொல்ல வேண்டும். யுத்தத்திற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் சிறு சேதங்களுக்குள்ளாகிய நிலையில் இருக்கின்றன. அவற்றைத் திருத்தம் செய்து, புதிதாக வேண்டியதொகுதிக் கட்டிடங்களை நிர்மாணித்தால் இந்தத் தேவை பூர்த்தியாகிவிடும்.

இவற்றைத் திருத்தம் செய்வதற்கு முதற்கட்டமாக 900 மில்லியன் ரூபாய் நிதியை இலங்கை அரசும் இந்திய அரசும் ஒதுக்கியுள்ளன. முக்கியமாக இந்தப் பீடங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

ஆகவே, இப்போதுள்ள பிரச்சினை, யாழ்ப்பாணத்திலிருந்து வரவேண்டிய விரிவுரையாளர்கள், ஊழியர்கள் போன்றோர் தொடர்பானதே. எனவேதான் சொல்கிறோம், இது பௌதீக வளப் பற்றாக்குறைப் பிரச்சினையையும் விட பிரதேச அமைவிடம் தொடர்பான மனநிலைப் பிரச்சினை என்று.

இங்கே இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இன்னொரு விடயத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

வடமாகாண சபையின் நிர்வாக அமைப்பைத் திருகோணமலையில் இருந்து வடக்கே கொண்டு செல்வதற்குத் தீர்மானித்தபோது அந்த நிர்வாக அமைவிடத்தை வன்னியில் அமைக்கலாம் என அரசாங்கம் தீர்மானித்தது. அதற்கான அறிவிப்பையும் அது விடுத்திருந்தது.

ஆனால், அரசாங்கத்தின் சிந்தனையையே யாழ்ப்பாணத்து அதிகாரிகள் மாற்றிவிட்டனர். இதற்காக அவர்கள் கூறிய காரணங்கள் நகைப்பிற்குரியன. இதற்காக அவர்கள் எழுதிய பெயரிடப்பட்ட கடிதங்களிலிருந்து பெயரிடப்படாத கடிதங்க்ள் வரையில் ஏராளமுண்டு.

எப்படியோ அவர்கள் தங்களுடைய முயற்சியில் வெற்றியடைந்து வடமாகாணசபையைத் தங்களுடைய வீட்டின் கோடிகளுக்குக் கொண்டு சென்று விட்டனர்.

இப்பொழுது வடமாகாணசபை யாழ்ப்பாணத்தில் எங்கே இயங்குகிறது என்று யாருக்குத் தெரியும்?

இலங்கையில் உள்ள மாகாண சபை நிர்வாகத்திலேயே மிக மோசமான நிலையில் உதிரிகளாகச் சிதைந்திருப்பது வடமாகாணசபை மட்டுமே.

மாகாணசபைக்கான நிதி ஒதுக்கீட்டில் அதிகளவு பணம், வீட்டு வாடகைக்கே கொடுக்கப்படுகிறது என மாகாணசபையின் நிர்வாகப் பிரிவு உயர் அதிகாரியான திரு. ரங்கராஜன் தெரிவித்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இப்படித்தான் பல்கலைக் கழகத்தின் பீடங்களை அமைக்கும் நடவடிக்கைக்குப் பதிலாக மாற்று ஒழுங்குகளை இரகசியமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நிர்வாகமும் செய்து விடுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள்.

ஆனால், கிளிநொச்சியில் இந்தப் பீடங்களை அமைப்பதற்கு வன்னி மக்கள் தாராளமாக உதவ முன்வந்துள்ளனர். இதனை உயர்கல்வி அமைச்சரே பாராட்டியுமுள்ளார்.

ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்று உருவாகும்போது அதற்கு அந்தப் பிரதேச மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம். அத்தகைய ஆதரவும் ஒத்துழைப்பும் அந்த மக்களின் ஈடுபாடும் கிளிநொச்சியில் இருப்பதையிட்டு மகிழ்வடைகிறேன் என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தப் பல்கலைக்கழகப் பீடங்களை அமைப்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரும் கூடுதலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் பொறியியற் பீடத்தை அமைப்பது என்ற அறிவிப்பு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்டது. இதற்கான காணி இதுவரையில் மூன்று இடங்களில் ஒதுக்கப்பட்டது.

முதலில் காணி ஒதுக்கப்பட்ட இடம் கிளிநொச்சி நகரில் டிப்போ அமைந்துள்ள இடத்துக்கு அண்மையான பகுதியாகும்.

ஆனால், பின்னர் இந்த இடங்களில் மக்கள் அத்துமீறிக் குடியேறியமையால் இந்த இடம் கைநழுவிப் போனது.

பிறகு முறிகண்டியிலிருந்து அக்கராயன்குளத்துக்குச் செல்லும் வீதியில் இரண்டாம் கட்டைக்குஅண்மையான பகுதியில். அதுவும் பின்னர் இல்லாமற் போய்விட்டது.இப்போது கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் அமைவிடம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆனால், இந்த இடத்திலாவது அது அமையும் சாத்தியங்கள் உண்டா என்பதே இன்றைய கேள்வி.

இதேவேளை கடந்த வாரம் கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்தின் கல்வி நிலை தொடர்பாக எழுதப்பட்டிருந்த கட்டுரை தொடர்பாக கல்விச் சிந்தனையாளர்களிடையே பலவிதமான அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதில் முக்கியமானவையாக இருப்பவை இரண்டு. ஒன்று, அடிப்படைக் கல்வியாகிய முன்பள்ளிக் கல்வி தோற்கும்போது அல்லது அந்தக் கல்வி போதாமையாகஇருக்கும்போது பின்னர்தொடரப்படுகின்ற கல்வி மிகப் பாதிப்பானதாகவே இருக்கும். இது பெறுபேறுகளில் மட்டுமல்ல மாணவர்களின்ஆளுமை விருத்தியிலும் குறைபாட்டையே கொண்டிருக்கும் என்பது.

ஆகவே முன்பள்ளிக் கல்வியை மேம்படுத்த வேண்டும். இதற்கு முன்பள்ளிகளை மேம்படுத்துவதுடன் அதற்கான ஆசிரியர்களுக்கான வேதனைத்தையும் கொடுக்க வேண்டும்.

மாதாந்தம் ஆகக் குறைந்தது ஐயாயிரம் ரூபாயைச் செலவழிக்கத் தவறுகிறோம். இந்தத் தவறே பின்னர் பிள்ளைகளின் இடைநிலைக் கல்வியிலும் உயர்கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்கின்றனர் கல்விச் சிந்தனையாளர்கள்.

அத்திவாரத்தைச் செம்மையாகப் போடவேண்டும் என்பதே இவர்களுடைய கருத்து.

அடுத்தது, தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோரின் அர்ப்பணிப்பும் அவர்களுடைய கல்விச் சேவையும் மனங்கொள்ளப்படவேண்டும் என்பது. நெருக்கடி காலத்தில் பணியாற்றியவர்கள்இவர்கள். பற்றாக்குறைகளைத்தீர்ப்பதில், ஆசிரிய வளப்பற்றாக்குறைகளைப் போக்குவதில் பெரிதும் பங்களித்தவர்கள்.

ஆகவே, இவர்களுடைய சேவையை இன்னும் பெறவேண்டியிருப்பதால் இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும். இதன்மூலம் பிரதேசங்களிலேயே பெருமளவுக்கான அனுபவம் மிக்க ஆசிரியவளத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதும்.

# தாதியர் சேவை குறிப்பை அமுல்படுத்த சுகாதார சேவை தவறியுள்ளது

## தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தாதியர் சேவைக் குறிப்பை அமுல்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தவறியுள்ளதாகவும் இப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படாதுவிடின் சுகாதார சேவை சீர்குலையும் எனவும் தாதியர் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

புதிய தாதியர் சேவைக் குறிப்பானது 2010 நவம்பர் மாதம் அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. நாட்டின் 95 சதவீத தாதியர்கள் அங்கம் வகிக்கும் பொதுச்சேவை தாதியர் சங்கம் தெரிவித்தது.

இதை அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் இருந்தன. ஆனால், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என அச்சங்கத்தின் செயலாளர் அசோகா அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் - மாணவர் விகிதம் 1:15 ஆக இருக்க வேண்டும். ஆனால், இலங்கையில் அது 1:200 ஆக உள்ளது. தாதிய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதியளவு தகுதியான ஆசிரியர்கள் இல்லாதுவிடின் தாதியர் கல்வி கீழிறங்கி விடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை 2011 டிசெம்பர் மாதம் நடைபெற்ற தாதியர் பரீட்சையில் 45 சதவீதமானோர் சித்தி பெறத் தவறியதாக, அரசாங்க தாதிய உத்தியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் சமன் ரட்னபிரிய தெரிவித்துள்ளார்.

சித்தியடைவதற்கான குறைந்தபட்ச புள்ளியை 50 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டமை மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால், இப்பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டிய பலர் சித்தியடையவில்லை.

கொழும்பு தாதியர் கல்லூரியில் பரீட்சை எழுதிய 100 மாணவர்களில் 45 பேரும் அநுராதபுரம் தாதியர் கல்லூரியில் 100 மாணவர்களில் 37 பேரும் சித்தியடையத் தவறியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருள் கடத்தலில் பல்கலைக்கழக மாணவர்கள்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் மற்றுமொரு நபரும் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்ததாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் மாத்தறை மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

ஏனைய சந்தேக நபர் வெல்லம்பிட்டி சேதவத்த என்னும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

இரத்மலானை மெலிபன் வீதியில் வைத்து கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களிடம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் போது வெல்லம்பிட்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் தமக்கு போதைப் பொருளை விநியோகம் செய்வதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மூவரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதைப் பொருளை விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் படையணி

(கொழும்பு)

நாட்டில் பத்தாயிரம் தேர்தல் மத்திய நிலையங்களை தொடர்புபடுத்தும் வகையில் தொடர்பாடல் படையணியொன்றை உருவாக்க ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய, குறித்த படையணியை தோற்றுவிக்க கட்சியின் ஊடகத்துறை பிரதானி மங்கள சமரவீரவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றனது. தொடர்பாடல் படையணியை அமைக்கும் முதல் கட்ட பணியாக ஒவ்வொரு தேர்தல் மத்திய நிலையத்திலும், தலா ஒரு இணைப்பதிகாரியை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.


அத்துடன். இரண்டாம் கட்ட நடவடிக்கையாக 10 பேரைத் தொடர்பாடல் குழுவொன்றை அமைப்பதற்கும். 3 ஆம் கட்டமாக மேலும் ஒரு இலட்சம் பேரை தொடர்பாடல் படையணி வலையமைப்பில் இணைந்து கொள்ளவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களின் மூலம் மக்கள் மத்தியில் தகவல்களை பகிர்ந்தளிக்கும் பிரதான நடவடிக்கையையே இந்த படையணி மேற்கொள்ளவுள்ளது.



நோர்வேயின் அரசியலமைப்பு தின நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# பட்டாசு வெடித்து மகிழ்ச்சி



(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதான செய்தியை அடுத்து தெற்கின் பல பகுதிகளிலும் பொதுமக்கள் பட்டாசு வெடித்து தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளனர்.

அம்பலாங்கொடை, பட்டபொல, எத்கந்துர உள்ளிட்ட பல பகுதிகளிலுமுள்ள பொதுமக்களே இவ்வாறு பட்டாசு வெடிதது தஙகளது மகிழ்ச்சியினை வெளிப படுத்தியுள்ளனர்.

# உஷ்ணத்துடனான வானிலை நீடிக்கும்

(கொழும்பு)

உஷ்ணத்துடனான வானிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரத்தின் பின் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காலநிலை ஆரம்பிக்கப்படவுள்ளதால் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளில் சிறிதளவு இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைகளத்தின் வானிலை நிபுணர் கே.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

# நீர் தேங்கும் எந்தவொரு இடத்திலும் டெங்கு நுளம்பு முட்டையிடும்

(கொழும்பு)

நீர்தேங்கும் எந்தவொரு இடத்திலும் டெங்கு நுளம்பு முட்டையிடுகின்றமை ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

அந்தந்த பகுதிகளில் உள்ள சுற்றாடல் தன்மைகளுக்கு அமைய டெங்கு நுளம்பின் பெருக்கம் இடம்பெறுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய வாழை மட்டை, மரங்களின் இலைகள், இறப்பர் பால் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் தேங்காய் சிரட்டை, இரத்தினக்கல் அகழ்விற்காக தோண்டப்படுகின்ற குழிகள், கழிவுகளாக வெளியேற்றப்படும் கிண்ணங்கள் மற்றும் கிணறுகளில் டெங்கு நுளம்பு பரவுவதாக அமைச்சு குறிப்பிடுகிறது.



அத்தகைய இடங்களை அழிபபதில் அசௌகரியம் இருக்குமாயின் கிருமி நாசினிகளை தெளிப்பது, புகை விசுறுவது மற்றும் நீர் தேங்குவதை தடுப்பது போன்ற வழிமுறைகளை கையாள முடியுமென சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

# மனிதாபிமான அடிப்படையில் சுற்றறிக்கை இடை நிறுத்தம்



(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர தர கல்வி நடவடிக்கைகளுக்காக தேசிய பாடசாலை ஒன்றிலிருந்து மற்றுமொரு தேசிய பாடசாலைக்கு மாணவர்கள் சேர்க்கப்படுவதை தடுக்கும் வகையில், கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்காக கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இந்த சுற்று நிருபத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் அமைச்சரவையும் இருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


எனினும் சில பாடசாலைகளில் இருந்த மாணவர்கள் விலகி வேறு பாடசாலைகளுக்கு சென்றுள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் இந்த வருடத்தில் மாத்திரம் அந்த நடவடிக்கைக்கு சந்தர்ப்பமளிக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற பிள்ளைகளுக்கு சிறப்பான முறையில் கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. தான் தோன்றித்தனமாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டால் உயர்தரக் கல்வியில் அநாவசிய பிரச்சினைகள் ஏற்படலாம் என கூறினார்.

எவ்வாறாயினும் குறித்த சுற்று நிருபத்தை கல்வி அமைச்சு முற்றாக இரத்துச் செய்ய வேண்டுமென இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுற்று நிருபம் இரத்துச் செய்யப்படாவிட்டால் அரசாங்கம் அடுத்த வருடத்தில் அதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும் என சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறியுள்ளார்.

# வயல்களுக்கூடாக நெடுஞ்சாலை; அடிப்படை உரிமை மீறல் மனு



(கொழும்பு)

திருகோணமலை, தம்பலகாமத்தை சேர்ந்த நெற்செய்கையாளர்கள், தமது நெல் வயல்களுக்கூடாக நெடுஞ்சாலை அமைப்பதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நெடுஞ்சாலை அமைவதால் தாம் நெல்வயல்களை இழக்க நேரிடுமெனவும் தொடர்ந்து தமது வாழ்வாதாரத்தை இழக்க நேரிடுமெனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் வெள்ளம் ஏற்பட்டு வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடுமெனவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் 30, 2011 இலிருந்து அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்ட படியால் வர்த்தமானி அறித்தல் மூலம் உருவாக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்கள் இப்போது இல்லையெனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

புதிதாக அமையவுள்ள நெடுஞ்சாலைக்கு சமாந்தரமாக இரண்டு முக்கிய வீதிகள் ஏற்கெனவே இருப்பதால் இந்த நெடுஞ்சாலை தேவை இல்லாதவொன்றெனவும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

## பதிவு செய்யப்படாத இணையத் தளங்களுக்கு எச்சரிக்கை


(கொழும்பு)

இலங்கையில் இயங்கி வரும் பதிவுக்கு உட்படுத்தப்படாத இணையத் தளங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இயங்கி வரும் மற்றும் இலங்கை தொடர்பான செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்து கொள்வதன் மூலம் இணையத்தளங்கள் தடை செய்யப்படுவதனை தவிர்க்க முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# அரியநேந்திரனின் நம்பகத்தன்மை எத்தகையது?
# புளொட் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்து...



**தொ**ழில் ரீதியாக மிருக வைத்தியரின் உதவியாளரான (மிருக சினைப்படுத்தும் அலுவலர்), திரு.அரியநேந்திரன், அடிப்படையில் ஒரு ஜக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளராவார். அன்று மட்டக்களப்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த தினக்கதிர் என்னும் செய்திப்பத்திரிகையில் ஒரு செய்திசேகரிப்பாளராக இவரும் இணைந்து கொண்டார்.

மிருகவைத்திய உதவியாளர் (மிருக சினைப்படுத்தும் அலுவலர்), செய்தியாளர் என்னும் இரு முகங்களுடனும் சமூகத்துடன் ஊடாடிய அரியநேந்திரன், அப்போது விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த கௌசல்யனுடன் இருந்த உறவுமுறையைப் பயன்படுத்தி புலிகளின் விசுவாசியாக தன்னை உருமாற்றிக் கொண்டார். புலிகளின் தொடர்பு ஜக்கிய தேசியக் கட்சியின் அரியநேந்திரனை, தமிழ் தேசியவாதியாக காட்டிக்கொள்ள உதவியது.

2004 இல் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் புலிகளின் மட்டக்களப்புக்கான வேட்பாளர்கள் பட்டியலில் கௌசல்யனூடாக இடம்பிடித்துக் கொண்ட அரியநேந்திரனால் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. அன்று புலிகள் இயக்கத்தில் கருணாவின் பிரிவால் ஏற்பட்டிருந்த குழப்பநிலையை சாதுரியமாக பாவித்து, அப்போது வெற்றிபெற்றிருந்த சிறந்த சமூக சேவையாளரான கிங்ஸ்லி இராசநாயகத்தை பதவியில் இருந்து விலக்குவதன் மூலம் தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வருவதற்கான சதி முயற்சியை அரியநேந்திரன் எடுத்தார்.

கௌசல்யனின் ஊடாக கிங்ஸ்லி இராசநாயகத்தை இராஜினாமா செய்யுமாறு அரியநேந்திரன் தூண்டியிருந்தார். ஆனால் இராசநாயகம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்ற வகையில் புலிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்திருக்கவில்லை.

இதன் விளைவாக ஒக்டோபர் 14 - 2004 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராசநாயகம் படுகொலை செய்யப்பட்டு அவரது இடம் அரியநேந்திரனுக்கு வழங்கப்பட்டது. கிங்ஸ்லியின் கொலைக் குருதியால் பாக்கியசெல்வம் அரியநேந்திரன் தனது பட்டாபிசேகத்தை நிறைவு செய்து கொண்டார்.

விடுதலைப் புலிகளிலிருந்து கருணா பிரிந்தபோது, கருணாவின் பிளவை நியாயப்படுத்தி அரியநேந்திரன் செயற்படலானார். ராஜன் சத்தியமூர்த்தி, ஜெயானந்த மூர்த்தி, சிவராம் ஆகியோருடன் இணைந்து கருணாவின் செயற்பாட்டை பிரதேச வாதம் பேசி நியாயப்படுத்தினார். ஜக்கிய தேசியக் கட்சியில் இருந்து தமிழ் தேசியத்திற்கு தாவிய அரியநேந்திரன் இறுதியில் மட்டக்களப்பு வாதத்திற்கு தாவினார்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை மீளவும் ஸ்திரப்படுத்திய பின்பு அரியநேந்திரன் தடாலடியாக கருணாவிற்கு எதிராக திரும்பியதுடன், புலிகளின் ஆதரவாளனாகவும் தன்னை காட்டிக் கொண்டார். ஒருவேளை கருணாவின் கை மட்டக்களப்பில் ஓங்கியிருந்திருந்தால், இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் கருணாவின் விசுவாசியாக இயங்கியிருப்பார். இத்தகைய சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டு வரும் அரியநேந்திரன் என்பவரே, எமது அமைப்பின் நம்பகத்தன்மை பற்றி பேசியிருக்கிறார்.

### அரியநேந்திரன் இவ்வாறு செயற்படுவதன் பின்னணி என்ன?

சமீபகாலமாக அரியநேந்திரன் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் தன் மீதான கவனஈர்ப்பை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றார். இதன் தொடர்ச்சியாகவே தற்போது மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியை மீறி, தமிழ் தேசியக் கூட்டமைப்பில் எமது அமைப்பை இணைத்துக் கொண்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்றும் எச்சரிக்கை ஒன்றை விட்டிருக்கின்றார். இதன் மூலம், தன்னை மட்டக்களப்புக்கான தமிழரசுக் கட்சியின் தலைவராக காண்பிக்க முயன்றிருக்கிறார்.

இந்த இடத்தில் கருணாவின் மட்டக்களப்பு அரசியலை ஆதரித்து புலிகளை உடைக்கத் துணைபோனது போன்று, மட்டக்களப்புக்கான தமிழசுக் கட்சியின் தலைமையாக காட்டி, தமிழ் தேசியக் கூட்டமைப்பை உடைக்க முற்படுகின்றார். நாம் மேலே குறிப்பிட்ட பாக்கியசெல்வம் அரியநேந்திரனின் தீய உள்நோக்கம் இதுவே ஆகும்.

சூழ்ச்சியாலும் சதியாலும் நாடாளுமன்ற கதிரையில் அமர்ந்த அரியம், தன்னை மட்டக்களப்பின் ஏகதலைவனாக காட்டிக்கொண்டு தனது பதவி, பட்டங்களுக்கு இடையூறு வந்துவிடக்கூடாதென்ற முன்னெச்சரிக்கையுடன் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், கட்சிகளின் கூட்டிணையும் சவாலுக்கு உட்படுத்துகின்றார்.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தின்போது கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனை பல தடவைகள் துரோகி என விளித்துப் பேசியதும் கூட்டமைப்பை சிதைக்கும் முயற்சியின் ஒரு அங்கம் என்பதில் சந்தேகமில்லை.

---

# ஒப்ரா வின்ஃப்ரேயும் அமீர்கானும்

**சில** ஆண்டுகளுக்கு முன்னால், என் மனைவி, ஓப்ரா வின்.்.ப்ரேயின் தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருப்பார். ஓப்ரா, சிறுவயதில் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, பின் தொலைக்காட்சியில் சமூகத் தொடர் ஒன்றை ஆரம்பித்து மிகப் பிரபலமான ஒருவர். பல எபிஸோட்கள் மிகவும் நெகிழ வைத்தவை என்று சொல்வார்... கேலியாக, நான் அவரை "ஒப்பாரி வின்.்.ப்ரே என்று சொல்வேன்.

அதிகம் பார்த்ததில்லை.

ஆனால், சென்ற வாரம் "சத்யமேவ ஜெயதே" என்னும் அமீர்கானின் தொடர் பார்த்தேன். மிகவும் பாதித்து விட்டது.

பெண் சிசுக் கொலை என்னும் தலைப்பில் அந்த ஒன்றரை மணி நேர ஆவணம், பெண் சிசுக் கொலை என்னும் தலைப்பை நன்றாக ஆராய்ந்து, அதன் காரணங்களை, அது பற்றிய தவறான எண்ணங்களை அகற்றி, பாதிக்கப் பட்டவர்களுடன் உரையாடி, அது சம்பந்தமாக மேலே செய்ய வேண்டிய காரியங்களைக் குறிப்பிட்டு நேயர்களையும் அதில் ஈடுபட அழைத்து - இது போன்ற ஒரு முழுமையான தொடர் கண்டு மிக நாட்களாயிற்று.

மிக முக்கியமாக, ராஜஸ்தானில், sting operation மூலம் வெளிக்கொணரப்பட்ட, பெண் சிசுக் கொலைக்குத் துணைபோகும் மருத்துவர்களை வெளிக் கொணர்ந்த பத்திரிகையாளர்களுடனான பேட்டி. ஒரு சமூக சாதனையாளர்களாகக் கொண்டாடப்பட வேண்டிய அவர்கள், பல்வேறு நீதிமன்றங்களில் அலைக்கழிக்கப்படும் அவலத்தையும் சுட்டிக் காட்டி, ராஜஸ்தான் அரசுக்கு, அவ்வளவு வழக்குகளையும் ஒரு நீதிமன்றத்துக்கு மாற்றக் கேட்கும் ஒரு மனுவுக்கு ஆதரவு திரட்டினார்.

இது ஒரு மிக முக்கியமான ஒரு செயற்பாடு. சும்மா போன போக்கில் நாட்டின் பிரச்சினைகளைப் பற்றி வெறும் உணர்ச்சிகரமாகப் பேசி விட்டுப் போய்விடாமல், அதை மாற்ற ஒரு துரும்பை எடுத்துப் போடும் ஒரு மிக முக்கியமான முயற்சி.

இவ்வாரம் சிறு வயதில் பாலியல் பலாத்காரத்தில் பாதிக்கப் படுபவர்களைப் பற்றி.

மிகவும் துணிச்சலாக ஒரு இள வயதுப் பெண்ணும், ஆணும் முன்வந்து தாங்கள் பாதிக்கப்பட்ட கொடுமையைக் கூறினார்கள். இந்தியப் பொதுவெளிக்கு இது மிகவும் புதிது.

இதன் பல பரிமாணங்களையும் வழக்கம் போல் ஆராய்ந்து, மன நல மருத்துவர்கள், குழந்தைகளுக்கு உதவும் "child help line" போன்றவர்களுடன் பேசி, - இது பற்றிய ஒரு சட்டம் கூட இல்லாத கொடுமையையும் சுட்டிக் காட்டினார்.

சிறு குழந்தைகளுடன் ஒரு சின்ன பயிற்சிப் பட்டறை நடத்தினார் - பாலியல் அத்துமீறல்கள் என்பதை எப்படிக் குழந்தைகள் உணர்ந்து கொள்வது என்பது பற்றி.

நாடாளுமன்றத்தில் ஒரு இளம் பருவ பாலியல் தடுப்புச் சட்டம் இன்னும் நிறைவேறாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டி, அதை நிறைவேற்றக் கோரும் ஒரு மனு. எஸ்.எம்.எஸ்கள் மூலம் ஆதரவு திரட்டி, அந்த எஸ்.எம்.எஸ்களின் கட்டணத்துக்கு ஈடான ஒரு தொகையைத் திரட்டி. child help line நிறுவனத்துக்கு வழங்கும் ஒரு திட்டத்தையும் வைத்திருக்கின்றார். அதற்கு, ரிலையன்ஸ் .்.பவுண்டேஷனின் துணையையும் வைத்திருக்கிறார்.

மிக மிகத் துணிச்சலான, நேர்மையான முயற்சி. தன் புகழை ஒரு சமூகக் காரியத்துக்குப் பயன்படுத்தும் அமீர் பாராட்டப்பட வேண்டியவர். ஒரே சமயத்தில், தூர்தர்ஷன், ஸ்டார் மற்றும் பல்வேறு மொழித் தொலைக்காட்சிகளிலும் நிகழ்ச்சி வெளியாக ஒப்பந்தங்கள் என்று மிக புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டிருக்கிறார்.

ஈஸ்வர அல்லா தேரே நாம் நாவலில், ஆதி சொல்வார், "காந்திய வழி அறுகம்புல் போல' கோடையில் காய்ந்தது போல் இருந்தாலும், ஒரு நாள் மழைக்கு மீண்டும் முளைத்தெழுந்துவிடும்..." என்று. எவ்வளவு உண்மை!

**- பாலா**



**இன்று** காலை நாங்களும் அமீர்கானின் சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சியைப் பார்த்தோம். இன்னொரு விவாத நிகழ்ச்சி என்று நினைத்த எங்களுக்கு இந்நிகழ்ச்சி நடத்தப்பட்ட விதம் ஆச்சரியம் தந்தது.

முதலில் பாலியல் தொந்தரவுக்கு ஆளான குழந்தைகளைப் பற்றிய புள்ளிவிவரம், அதைப் பற்றி மேலும் அதிக விவரங்கள், பிறகு அதனால் பாதிக்கப்பட்ட இருவரின் பேட்டி, ஒரு பொது மருத்துவர் ஒரு மனநல மருத்துவரின் விளக்கங்கள், அதன்பின் Child Helpline-ஐச் சேர்ந்த ஒருவரோடு அவரது அனுபவம் குறித்து சிறிது நேரம் பேச்சு, குழந்தைகளுடன் அவர்களுக்கு பாலியல் அத்துமீறல்கள் குறித்த அறிமுகம் என்று ஒன்றரை மணி நேரத்தில் மிக நன்றாகத் தொகுக்கப் பட்டிருந்தது.

இன்றைய நிகழ்ச்சியில் மிகவும் யோசிக்க வைத்த விஷயம் குழந்தைகளை நம்பாத பெற்றோர்கள்தான். இரத்தம் வழியும் குதத்தைக் காண்பித்தும், நிறைய மாம்பழம் சாப்பிட்டதால் வந்த பிரச்சினை என்று தன் மகனைச் சமாதானப்படுத்திய அன்னையை என்ன சொல்வது? பின்னர் அவரே இந்நிகழ்ச்சியில், "குழந்தைகள் சொல்வதைக் கவனியுங்கள், நம்புங்கள். இதுபோன்ற விஷயங்களில் பெரியவர்கள் சொல்வதை நம்பாதீர்கள்" என்றார்.


மிகவும் தைரியமாக தங்களுக்கு நிகழ்ந்த மோசமான சம்பவங்களை இதுபோன்ற பொது நிகழ்ச்சியில் பகிர்ந்துகொண்டவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதுபோன்ற விஷயங்கள் தனக்கோ, தன்னைச் சார்ந்தவர்களுக்கோ நிகழாததாலேயே அவற்றைப் பற்றி எந்த அறிவும், கவலையுமற்ற மனிதர்களை இந்நிகழ்ச்சி கண்டிப்பாகக் கொஞ்சமாவது யோசிக்கவைக்கும் என்று நினைக்கிறேன்.

**- ஆனந்த்.**

**நன்றி:**
**jeyamohan.in**





ஈழத்தின் அநேகமான எழுத்தாளர்களின் படைப்புகள் என்னை அவ்வளவாகக் கவர்ந்ததில்லை. ஒரு படைப்புக்கான கடின உழைப்பை, அதன் பெறுபேறான கலைத் தரத்தை நான் இங்குக் கண்டதில்லை. மேடையில் ஒலி வாங்கி முன்னால் தொண்டையைச் செருமிக்கொண்டு உரத்த தொனியுடன் தன் குரலின் எதிரொலியைப் பரீட்சித்துப் பார்க்கும் பிரசங்கி ஒருவனின் உரையை அவர்களுடைய படைப்புகள் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்.

ஒரு திரளான கூட்டத்தை நோக்கிப் பேசுவதைப் போன்றதே அவனின் பாவனை. தனக்குத் தானே அவன் ஒருபோதும் பேசிக்கொள்ள விரும்புவதில்லை. தன் இரசனைகளை, தெரிவுகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டுக் காலம், சூழல் அறிந்து நேயர் விருப்பத்தை நிறைவேற்றும் வானொலி அறிவிப்பாளன் வேஷத்துடனும் அவ்வப்போது அவன் தோன்றுகிறான்.

எழுபதுகளில் இங்கிருந்த அரசியல் தலைமைத்துவத்துக்கு அமைவாக 'வர்க்க முரண்பாட்டு' இலக்கியப் படைப்புகளை அவர்கள் 'தயாரித்துக்' கொண்டிருந்தார்கள். 80களின் பிற்பகுதியிலிருந்து இங்கு மாற்றமடைந்த அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப இவர்களில் அநேகம் பேர் தங்களுக்குச் 'சுண்ணாம்பு அடித்து' நிறத்தை மாற்றிக் கொண்டார்கள்.

அப்போதிருந்து சுமார் 2000ஆம் ஆண்டுவரையிலான பகுதி தமிழ்த் தேசியம் பற்றிய போலி இலக்கியப் படைப்புகளின் உற்பத்திக் காலம். இந்த வறட்டு எழுத்தாளர்கள் பத்திரிகைகளிலும் அதிகார மையங்களிலும் முக்கியத்துவம் பெற்று ஊர்வலம் வந்தார்கள். எந்தக் கொள்கைக்கும் விசுவாசமற்ற இவர்கள், காற்றின் திசையறிந்து பாய்மரக் கப்பல் செலுத்துவதில் வல்லவர்கள். விருதுகளையும் பட்டங்களையும் பொன்னாடைகளையும் கெஞ்சிக் கூத்தாடிப் பெற்றுத் தம்வசம் ஆக்கினார்கள்.

அகத் தூண்டல், மன உந்துதல், சிருஷ்டித்துவம் சார்ந்த மன எழுச்சி என்பவை இல்லாமல் தயாரிக்கப்படும் படைப்புகளைக் கொண்டாடும் ஒரு போக்கு இங்கே நீண்ட காலமாக உண்டு. தீபாவளி, கிறிஸ்துமஸ், ஈகைத்திருநாள், சுனாமி, 'முள்ளிவாய்க்கால், அரசியல்வாதிகளின் ஜனன, மரண தினங்கள், அப்பா-அம்மா, தாத்தா-பாட்டி, மாணவர்-ஆசிரியர், காதலர்-காவலர் தினங்களை ஒட்டிப் படைப்புகள் 'தயாரிக்கும்' ஒரு போக்கு அது.

உலகத்தின் பிற பாகங்களிலிருந்து வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புக்களை வாசித்தறியாத இவர்கள் குண்டுச் சட்டிக்குள் தங்கள் கற்பனைக் குதிரைகளை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒரு கதை பண்ணப் பத்திரிகைச் செய்தியொன்று போதுமானது. அல்லது ஒரு சித்தாந்தம், தத்துவம் என்பவை போதுமானவை. ஈழத்து இலக்கியச் சூழலில் இந்தப் 'பொய்மைகளும்', 'பாசாங்குகளும்' தங்களைப் பெரும் படைப்பாளிகளாக ஸ்தாபிக்கப் படும்பாடு சொல்லி மாளாது...

அண்மையில் ஈழத்துப் பேராசிரியர் ஒருவர் இலக்கியக் கூட்டமொன்றில், எஸ்.பொ.வின் 'தேர்' கதை பற்றிக் குறிப்பிடுகையில், 'அது மத்தியதர வர்க்கத்தின் வெறும் மன உளைச்சல்' என்றும்,



# காற்றின் திசையில் கப்பல் செலுத்துதல்!

'அதனால் சமூகப் பயன்பாடு எதுவும் இல்லை' என்றும் சொல்கிறார். ஈழத்தின் இன்னொரு இலக்கியவாதியோ 'ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியற்றுத் தேக்க நிலையில் இருப்பதாக' அங்கலாய்க்கிறார். இந்த இரண்டு கூற்றுகளுக்கும் நடுவில் நெருங்கிய தொடர்பு இருக்கவே செய்கின்றது.

முன்னர் குறிப்பிட்ட பேராசிரியர் பல்கலைக்கழகங்களில் இடும் இத்தகைய முட்டைகளிலிருந்து வருஷா வருஷம் ஏராளமான குஞ்சுகள் வெளியேறுகின்றன. இத்தகைய பேராசிரியர்கள் சொல்வதை அப்படியே மறுபடியும் ஒப்புவித்துக் கீச்சிடுகின்றன. அதிகார மையங்களில், வெகுஜன ஊடகங்களில், கல்விக் கூடங்களில் போய் அமர்ந்துகொண்டு இவை புரியும் அழிச்சாட்டியங்களுக்கு ஓர் அளவில்லை. பிறகெங்கே ஈழத்து இலக்கியம் வளரும்?

**- உமா வரதராஜன் (சந்திரா இரவீந்திரனின் "நிலவுக்குத் தெரியும்" தொகுப்பிற்கான முன்னுரையில்)**

# 'குறில் நெடிலில்' சிக்கிய இசை!



S.K.பரராஜசிங்கம்

மேலைத்தேய இசையை படைப்பாற்றலுடன் படைத்தவர் மறைந்த தென்னிந்திய திரை இசையமைப்பாளர் சி.ஆர்.சுப்பராமன்.

காதல், தேவதாஸ் போன்ற படங்களில் அவர் தந்த சாகாவரம் பெற்ற பாடல்கள் பின்னால் வந்த பல இசையமைப்பாளர்களுக்கு மிகப் பெரிய உந்துதலாக [Inspiration] இருந்தன.

குறிப்பாக ஒ... ஓ... ஓ... தேவதாஸ் என்ற சுப்பராமனின் பாடல், பின் வந்த பல பாடல்களுக்கு உந்துதலாக இருந்தது. இந்த ஒரு பாடலை அகத்தூண்டுதாலகக் கொண்டு வெளிவந்த பாடல்கள் சில:

1. தேன் உண்ணும் வண்டு மாமலரைக் கண்டு - அமரதீபம் 1953 - ஏ.எம்.ராஜா, பி.சுசீலா - இசை: ரி.சலபதிராவ்

2. கண் மூடும் வேளையிலும் கலை என்ன கலையே - மகாதேவி 1957 - ஏ.எம்.ராஜா, பி.சுசீலா -இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி

3. அடி வான்மதி - சிவா - எஸ்.பி.பாலசுப்ரமணியம், சித்ரா - இசை: இளையராஜா

4. ஓ...ஓ பார்ட்டி நல்ல பார்ட்டி தான் - இதயம் 1991 - எஸ்.என். சுரேந்தர், மலேசியா வாசுதேவன் இசை: இளையராஜா

5. பாரிஜாதப் பூவே அந்த தேவலோக தேனே - என் ராசாவின் மனசிலே 1991 - எஸ்.என்.சுரேந்தர், சித்ரா இசை: இளையராஜா

6. உனது விழியில் நானே - குழந்தை 1994 - அருண்மொழி, உமா ரமணன் இசை: காண்டீபன்

சி.ஆர்.சுப்பராமனின் ஓ....ஓ... ஓ.. தேவதாஸ் என்ற பாடலை ஆதாரமாக வைத்துக்கொண்டே பின் வந்த பாடல்களை எல்லாம் ஒரு மாலையாக தொடர்ந்து பாடிக்கொண்டே இருக்கலாம். இந்தப் பாடல்கள் எல்லாம் Inspiration என்பதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும். இவை எல்லாம் நாம் இளையராஜாவின் பாடல்கள் மூலம் கேட்டு பெற்ற அனுபவங்களின் விளைவே. இசை பற்றிய ஓர் விழிப்புணர்வு இளையராஜாவின் வருகைக்குப் பின் தான் வந்தது என்பது எனது கருத்தாகும்.

ஒரே இராகமாக இருந்தாலும் வெவ்வேறு சுருதியில், தாளத்தில், வெவ்வேறு உணர்வுகளில் பாடப்பட்டாலும் அதில் ஊடுபாவாக விளங்கும் இராகத்தில் பாடல்களுக்கிடையே பொருந்தக்கூடிய சங்கதிகளால் பாடல்களை இணைத்து மாலையாக பாடிக்கொண்டே இருக்கலாம்.

இதை அறிவதற்கு ஆதாரமாக விளங்கியது இலங்கை வானொலியில் அன்று ஒலிபரப்பான "திரை தந்த இசை" நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் தமிழ்த் திரைப் பாடல்களில் அமைந்த இராகங்களை சொல்வார்கள். அதை தொடக்கி வைத்தவர் திரு.எஸ்.கே.பரராஜசிங்கம் என்ற இசைநிகழ்ச்சி தயாரிப்பாளர். இவரது இந்த நிகழ்ச்சி தந்த உந்துதல் தமிழ்நாட்டு தொலைக்காட்சிகளில் உருவான "சப்தஸ்வரங்கள்", "ராகமாலிகா" போன்ற இசை நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக அமைந்தது எனலாம். இசைத் தேடல் மிக்க திரு.எஸ்.கே.பரராஜசிங்கம் தொடக்கி வைத்த அந்த நிகழ்ச்சி இசை இரசனையை வளர்ப்பதாக இருந்தது. இந்த இசை இரசனையை சரியான திசையில் அவருக்குப் பின் வந்தவர்கள் வளர்க்கத் தவறியது வருந்தத்தக்கதாகும். இசை ஞானமில்லாத தயாரிப்பாளர்கள் / அறிவிப்பாளர்கள் இசை இரசனை என்பதை பாட்டுக்குப் பாட்டாக சுருக்கியதும், பின்னர் அது குறில், நெடிலில் சிக்கி தவிப்பதும் வருந்தத்தக்கது.

**- ரீ.சௌந்தர்.**



# லாக்ஸ் ரத்னம்!

சென்னையில் ஓர் இலக்கியக் கூட்டம். சுந்தர ராமசாமி உரையாற்றுவதாக ஏற்பாடு. சிறிய அரங்கம். கூட்ட நேரத்துக்கு முன்பே நிரம்பிவிட்டது அது. வெளியே நிறையப் பேர் நின்று கொண்டிருந்தனர். அதில் முக்கியமாக இயக்குநர் மணிரத்னமும் இருந்தார். இலக்கியவாதிகளில் சிலர் சினிமாகாரனிடம் நாம் போய் பேசுவதா என்ற போக்கும், சிலருக்குச்

...ணமாக இருக்கும் தயக்கமும் இருந்தது. ...லர் மட்டும் நேருக்கு நேராகப் பார்க்கும் ...த்தில் புன்னகைத்தனர். பதிலுக்கு அவரும் ...கைத்துக் கொண்டிருந்தார்.

...வித பந்தாவும் இல்லாமல் ரிலாக்ஸ ...ருந்தார். சினிமாவின் பரபரப்பை ஒதுக்கி ...துவிட்டு ஏற்றுக் கொள்வதற்குத் தயாரான ...கோப்பையாக அவர் இருந்தார். இருந்தாலும் ...டைய பிரபலம் அவருக்கு இடையூறாகத்தான் ...ந்து.

நான் அவருடைய இக்கட்டைத் தவிர்க்கும் நோக்கமாக அருகில் சென்று பேச்சுக் கொடுத்தேன். பம்பாய், இருவர், உயிரே படங்களுக்குப் பிறகு அவர் படமெடுப்பதற்கு அடுத்த பிரச்சினையைத் தேடிக் கொண்டிருந்தார். எனக்குக் கிடைத்த காற்று வாக்குச் செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதமாக, "அடுத்து இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் படமாக்க இருப்பதாகச் சொல்கிறார்களே?" என்றேன்.

எப்படித் தெரியும் போல புருவம் உயர்த்தினார். பத்திரிகையாளன் என்ற உண்மையைச் சொல்லாமல் அவரிடம் பேசும் விஷயத்தை நாளைக்குப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டியிருந்தால் அது நியாயமாக இருக்காது என்று ஒரு திடீர் குற்ற உணர்வு ஏற்பட்டது. நான் உடனே சொன்னேன். அவர் செல்ல கோபம் போல முகத்தை மாற்றினார். நீங்கள் எழுத வேண்டாம் என்றால் இதை நான் எழுத மாட்டேன் என்று உறுதியளித்தேன். நான் இப்படிச் சொன்னதும் அது அவரைச் சற்றே நெகிழச் செய்துவிட்டது. "அதனாலென்ன பரவாயில்லை" என்று கூறிவிட்டார்.

தொடர்ந்து பிரச்சினையான படங்களையே எடுத்துவிட்டேன். நடுவில் ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக ஒரு படம் எடுக்கிறேன். என்றார். "அக்னி நட்சத்திரம் மாதிரியா?" என்றேன்.

சற்று யோசித்து ஆமாம் என்று தலையசைத்தார். "கொஞ்சம் வேற மாதிரி" என்று சிரித்தார்.

"அலைபாயுதே" வந்தது. அதன் பிறகு இலங்கைத் தமிழர் வாழ்வைப் பின்னணியாக வைத்து "கன்னத்தில் முத்தமிட்டால்" வெளியானது. "அலைபாயுதே" அவர் சற்றே ஓய்வெடுத்துக் கொண்ட படம் போல தோன்றியது எனக்கு.

**- தமிழ்மகன் -**

# எமக்குத் தொழில் நடிப்பு!



90-களில் மோகன்லாலின் விசிறியாக இருந்தேன். அவர் நடித்த "சித்ரம்", "கிலுக்கம்", "ஏய் ஆட்டோ", "நம்பர் 20 மெட்ராஸ் மெயில்", "அங்கிள் பன்", "ஒண்ணுமுதல் பூஜ்ஜியம் வரா", "கிரீடம்".. என சத்யம் தியேட்டரில் ரிலீஸான அவருடைய அத்தனை படத்தையும் உலகப் படவிழா வரிசை மாதிரி பார்த்துக் கொண்டிருந்தேன்.

சென்னை ஜெமினி பாலத்துக்கு அருகே ஒரு மலையாளப் படத்துக்காக மோகன்லால் நடித்துக் கொண்டிருந்தார். அவருடன் நடிகை லட்சுமியின் மகள் ஐஸ்வர்யா நடித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம். மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாக மோகன்லாலிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

உங்களிடம் பத்திரிகை நிருபர் என்பதைவிட நான் உங்கள் விசிறி என்று சொல்லிக் கொள்வதில்தான் பெருமையாக இருக்கிறது என்றேன்.

"திடீரென்று வந்து நின்றால் நான் என்ன பேசுவது?" என்றார் அலுப்புடன்.

"பேட்டி போல அல்ல, அடுத்த காட்சி வைக்கும் வரை பேசினால் போதும்" என்றேன்.

"தமிழில் உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்?" என்றபோது "எம்.ஆர்.ராதா" என்றார். எதிர்பார்க்காத பதிலாக இருந்தது. அவருடைய இரசனைமீது மதிப்பேற்பட்டு, ஈர்ப்பு மேலும் அதிகமானது.

# வடகடல் நிறுவனத்தின் எதிர்கால திட்ட ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு கீழான வடகடல் நிறுவனத்தினது செயற்றிட்டங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

கொழும்பு மருதானையிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சரின் தலைமையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வடகடல் நிறுவனம் தற்போது முன்னெடுத்து வருகின்ற செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக வீரவில லுணுவில மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலைகளினது தொழிற்துறை நடவடிக்கை தொடர்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலுள்ள மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற் சாலைகளினது நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அத்துடன் வடகடல் நிறு வனத்தினது ஏனைய தொழிற்துறைசார் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர்துறை சார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார். இதில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி வடகடல் நிறுவனத் தலைவர் பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மன்னாரில் காசநோய் விழிப்புணர்வு

(மன்னார்)

உலக காசநோய் தினத்தையொட்டி நேற்று முன்தினம் காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் விழிப்புணர்வு நிகழ்வொன்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட காசநோய் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி யூட் ரவி பச்சைக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் என்.பரமதாஸ், உதவி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே.அரவிந்தன், வைத்தியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



## வவுனியா மாவட்ட செயலராக பந்துல ஹரிச்சந்திர பதவியேற்பு

(வவுனியா)



வவுனியா மாவட்டத்திற்கான புதிய மாவட்ட செயலாளராக எம்.கே.பந்துல ஹரிச்சந்திர நேற்று கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அவரை வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் என். திருஞானசம்பந்தனரால் வரவேற்கப்பட்டார்.

இதனையடுத்து, மதத்தலைவர்களின் ஆசி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றமையைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

எம்.கே.பந்துல ஹரிச்சந்திர இதற்கு முன்னர் காலி மாவட்ட செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர் எனக் கூறி பண மோசடி செய்தவர் கைது

(கொழும்பு)

தெனியாய பொலிஸ் பிரிவில் ஊடகவியலாளர் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு பணத்தை மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊழல்கள் தொடர்பான தகவல்களை ஊடகங்களில் வெளியிடப் போவதாக தெரிவித்தே அவர் பண மோசடியில் ஈடுபட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் மொறவக்க நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது அவரை இந்தமாதம் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெனியாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் சட்ட மா அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)



ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல போனமை பற்றிய விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸுக்கு ஹோமகம நீதவான் அழைப்பாணை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சித்திரவதைக்கான குழுவில் பிரகீத் எக்நெலிகொட அரசியல் தஞ்சம் பெற்று வெளிநாட்டில் வாழ்வதாகவும அவர் காணாமல் போகவிலலையென்றும் கூறியமை தொடர்பாக முன்னாள் சட்ட மா அதிபருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. கேலிச் சித்திரம் வரைபவரும் பத்தியெழுத்தாளருமான பிரகீத் எக்நெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காணாமல் போயிருந்தார். சரத் பொன்சேகா மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவும் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னராக பிரகீத் எக்நெலிகொட காணாமல் போயிருந்தார் .

## ஜே.வி.பி. - ஐ.தே.க. சந்திப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைவது தொடர்பில் ஜே.வி.பிக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணையப் போவதில்லை என ஜே. வி பி ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்த நிலையில் இந்த வாரத்தின் இறுதி நாட்களில், ஜே.வி.பியின் பிரதிநிதிகளுக்கும், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனை அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற விருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி யின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இரு ரயில்கள் மோதி விபத்து நான்கு ஊழியர்கள் பணி நீக்கம்



வேயாங்கொடை, கீனவல உப ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டு ரயில்கள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் நான்கு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன்போது பின்னால் வந்த ரயிலின் சாரதி மற்றும் சாரதி உதவியாளர் உள்ளிட்ட நால்வர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார். விபத்தில் 15 பேர் சிறு காயங்களுக்கு இலக்காகியிருந்தனர்.

விபத்துக்குள்ளான ரயில் ஒன்றின் இரண்டு எண்ணெய்த் தாங்கிகள் தடம்புரண்டுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார். இதன் காரணமாக குறித்த பகுதியில் ரயில் போக்குவரத்து ஒருவழிப்பாதைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 5 மீனவர்கள் கைது

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில், நேற்றுமுன்தினம் ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

என்.டி.டிவி இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. ஆந்திரபிரதேசம் கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடலோர பொலிசாரினால் இவர்கள், ஐந்து பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, சென்னை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## காலநிலை எதிர்வு கூறலுக்கு நவீன ராடர் கருவிகள்


(கொழும்பு)

மக்களுக்கு துல்லியமான காலநிலை குறித்த எதிர்வு கூறல்களை வழங்கும் பொருட்டு விசேட ராடர் கருவிகளை பொருத்தவிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் மகிந்த அமரவீர இது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

வெளிநாடுகளில் இருந்து இந்த விசேட தொழில்நுட்பத்துடனான ராடர் கட்டமைப்பை கொள்வனவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.





யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை மக்கள் குடியிருப்புப் பகுதியான மலைவேம்புச்சந்திக்கு அருகில் குப்பைகள் கொட்டப்படுவதால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

## புதிய குடும்பத் திட்ட தடுப்பூசி; அடுத்த மாதம் அறிமுகம்

புதிய குடும்பத்திட்ட தடுப்பூசியை அறிமுகப் படுத்துவதற்கு குடும்ப சுகாதார பிரிவு தீர்மானித்துள்ளது.

அண்மையில் டிப்ரோ போவேறா என்ற தடுப்பூசியைப் பயன்படுத்துவது நாட்டில் தடை செய்யப்பட்டதாக பிரிவின் பணிப்பாளர் விசேட நிபுணர் டாக்டர் தீப்தி சில்வா குறிப்பிட்டுள்ளார். குறித்த தடுப்பூசியில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக பெல்ஜியத்தில் இருந்து புதிய வகை தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய வகை தடுப்பூசி தற்போது நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் அடுத்த மாதம் முதல் அவை குடும்ப சுகாதார பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்

**பின்வருவனவற்றில் விரும்பிய ஐந்திற்கு விடைதருக.**

01)
1) சுய விளக்கம் என்றால் என்ன?
2) பூகோல் கிராமத்திற்கு துணைபுரியும் ஊடகங்கள் எவை?
3) பூகோள மயமாதலின் நன்மைகள் எவை?
4) பூகோள மயமாதலின் தீமைகள் எவை?

02)
1) நாகரிகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
2) திடஉறுதி என்றால் என்ன?
3) திட உறுதியுடன் செயற்பட அவசியமான காரணிகள் எவை?
4) திடவுறுதி வளர்த்துக்கொள்ள வேண்டிய குண அம்சங்கள் எவை?

03)
1) சமூகத்தின் மிகச்சிறிய அலகு எது?
2) சமூக காப்பு என்றால் என்ன?
3) தனியாள் நடத்தை இசைவாக்கம் அடையும் முறைகள் இரண்டும் எவை?
4) சமூக காப்பில் தாக்கம் செலுத்தும் நிறுவனங்கள் எவை?

04)
1) சமூகப் பாதுகாப்புக் குடும்பத்தின் பங்களிப்பு யாவ்வ?
2) சமூகக் காப்பிற்கு பாடசாலையின் பங்களிப்பு யாவை?
3) பாடசாலையில் காணப்படும் உறுப்பினர்கள் யாவர்?
4) குடும்பம் எத்தனை வகை? அவை எவை?

05)
1) சமூகப் பாதுகாப்பில் சமய நிறுவனங்களின் பங்களிப்புக்கள்?
2) சமய அமைப்புக்கள் யாவை?
3) சமூகப் பாதுகாப்பில் சமூக அமைப்புக்களின் பங்களிப்புக்கள்?
4) சமூக அமைப்புக்கள் எவை?

06)
1) சமூகக் கட்டமைப்பினை வரைந்து காட்டுக.
2) யாழ்ப்பாணத்தில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகள் எவை?
3) "ஒரு தனிநபரால் தனித்து வாழ முடியாது" இக்கூற்றினை விளக்குக.
4) ஐ.நா.தாபனம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது.

07)
1) ஜனநாயகம் என்பதன் பொருள் என்ன?
2) ஜனநாயகம் பற்றிய அறிஞர் சீலரின் கருத்து என்ன?
3) நேரடி ஜனநாயகம் என்றால் என்ன?
4) ஜனநாயகத்தின் பண்புகள் மூன்றினைப் பெயரிடுக.

08)
1) உள்ளூராட்சி நிறுவனங்கள்ளப் பெயரிடுக.
2) உள்ளூராட்சி நிறுவனத்தின் பணிகள் என்ன?
3) உள்ளூராட்சி சபைகளின் வருமானம் மூலம் என்ன?
4) மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்றனர்?

09)
1) பண்டையகால போக்குவரத்து முறைகளைக் குறிப்பிடுக.
2) நவீன தொடர்பாடல் கருவிகள் மூன்றினைப் பெயரிடுக.
3) நவீன கொடுப்பனவு முறைகளைத் தருக.
4) தொழில்நுட்ப மாற்றம் நிகழ்ந்த துறைகளைப் பெயரிடுக.

10)
1) சந்தை என்றால் என்ன?
2) வியாபா" வகைகள் எவை?
3) சில்லறை வியாபாரம் என்ன?
4) சர்வதேச வியாபார வகைகளைப் பெயரிடுக.



## மகாண மட்டப் பொதுப் பரீட்சை - தரம் 09

பகுதி - I
2 மணி

ஆசிரியர் : கே.கே.மனோராசா

# கல்வி முரசு



01) சமூகத்தின் மிகச் சிறிய அலகு எது?
1) பாடசாலை 2) குடும்பம் 3) ஆலயம் 4) சனசமூக நிலையம்

02) எமது கிராமத்தை நிர்வகிப்பவர்?
1) கிராம சேவகர் 2) பொலிஸ்
3) அரச அதிபர் 4) பிரதேச சபைச் செயலாளர்

03) அறிவுசார் கோட்பாட்டை ( multiple Intelling ence theory) முன்வைத்தவர்?
1) ஜிப்ரி பாலா 2) ஹொலார்ட் காட்ணர்
3) ஏ.வி.டைசி 4) கலிலியோ கலிலி

04) எமது பாராளுமன்றத்தை வடிவமைத்த சிற்பக் கலைஞர் யார்?
1) ஏ.வி.டைசி 2) மஹகமசேகர
3) ஜிப்ரிபாலா 4) சேர்.பொன்.இராமநாதன்

05) "சிறகு வெட்டிவிடப்பட்ட ஒரு சிறிய பறவை" எனக் குறிப்பிடப்பட்ட யூதச்சிறுமி யார்?
1) ஆனி பிராங் 2) கல்பனா சரன்லாற்
3) சானியா 4) ஜோன் பிராவ்

06) பூகோள கிராமத்தின் அறிவு வாயில் எது?
1) இணையம் 2) பத்திரிகை
3) கணினி 4) மேற்கூறிய யாவும் சரி

07) 'அம்மா', 'பிரகாசம் அற்ற உலகம்', பிரகாசமான பிள்ளை' என்ற நூல்களை எழுதிய அறிஞர்?
1) புரோன்டே 2) டபிள்யூ.டி.அமரதேவ்
3) மெக்ஸிம் கோர்ச் 4) லியோ ரோல்ஸ் ரோய்

08) பின்வருவனவற்றின் பூகோள மயமாதலின் நன்மை அடங்கும் தொகுதி?
P) சூழல் மாசடைதல்
Q) சுற்றுலாத் துறை விருத்தி
R) புதிய தொழில்நுட்பம் விருத்தி
S) வளசுரண்டல் ஏற்படல்
1) PQR 2) PS 3) QR 4) RS

09) இலங்கையின் தேசிய மலர் எது?
1) நீல அல்லி 2) நிலோற்பவம்
3) தாமரை 4) பூவரசு

10) நகரநிர்மாணம், சொக்லட், பானம் ஆகிய கொடைகளை வழங்கிய நாகரிகம் எது?
1) இந்து நதி நாகரிகம் 2) மொசப்பத்தேனியா
3) மயா இன்கா நாகரிகம் 4) குவாங்கோ

11) பிரமிட் கொடையை வழங்கிய நாகரிகம்,
1) சிந்துவெளி நாகரிகம் 2) இந்து நதி
3) எகிப்து 4) நைல்நதி

12) பௌத்த மதத்தின் புனித நூல் எது?
1) வேதநூல் 2) பைபிள்
3) திரிபிடகம் 4) அல்குர் ஆன்

13) கிறிஸ்தவ மதத்தின் தோற்றம் எந்த நாடு?
1) இந்தியா 2) வத்திக்கான்
3) மத்திய கிழக்கு 4) பிரேசில்

14) இந்து சமயத்தவர்களினைப் பிரதிநித்துவப்படுத்தும் புனித வழிபாட்டுத் தலம்?
1) நகுலேஸ்வரம் 2) திருப்பதி 3) புனித மக்கா 4) வத்திக்கான்

15) இலங்கையை சுவர்க்க பூமி என வர்ணித்தவர்கள்?
1) அமெரிக்கர் 2) ஒல்லாந்தர் 3) அராபியர் 4) இந்தியர்

16) இந்தியாவின் குகை ஓவியம் எது?
1) சிகிரியா 2) அஜந்தா 3) தாஜ்மகால் 4) சீனப்பெருஞ்சுவர்

17) ஐ.நா சபை உருவாக்கப்பட்டதன் நோக்கம்?
1) நிவாரணம் வழங்க
2) சர்வதேச மோதல்களைத் தடுக்க
3) நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்க
4) யுத்தத்தை ஏற்படுத்த

18) சமூகப் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் நிறுவனம் அல்லாதது?
1) பாடசாலை 2) குடும்பம் 3) சமயநிறுவனம் 4) கட்சிகள்

19) முஸ்லிம்களின் புனித வழிபாட்டுத் தலம் எது?
1) விகாரை 2) கோவில் 3) பள்ளிவாசல் 4) தேவாலயம்

20) கிராமத்தில் காணப்படும் சமூக அமைப்பு எது?
1) விளையாட்டுக் கழகம்
2) இளைஞர் கழகம்
3) கிராம அபிவிருத்திக் கழகம்
4) மேற்கூறிய யாவும்

21) " POLICE" என்ற "E" சொல்லில் குறிப்பது?
1) ஒழுக்கமான 2) வினைத்திறன் மிக்க
3) விவேகமான 4) கீழ்ப்படிவான

22) "ஸ்ரீலங்கா இராணுவம்" என பெயர்மாற்றப்பட்ட ஆண்டு?
1) 1972 2) 1949 3) 1951 4) 1960

23) கடல் தொண்டர் கடற்படை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு?
1) 1950 2) 1937 3) 1972 4) 1960

24) 1951 இல் உருவாக்கப்பட்ட அமைப்பு யாது?
1) விமானப்படை 2) கடற்படை 3) காலால் படை 4) தரைப்படை

25) சமூகப் பாதுகாப்பு 'முறிவடையக் காரணம் எது?
1) வறுமை
2) சட்டத்தை மதிக்காமை
3) சுயநலவாதியாக இருத்தல்
4) மேற்கூறிய யாவும்

26) கூட்டுறவு இயக்கத்தின் வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்?
1) ஏ.வி.டைசி 2) றொபேட் ஓவன் 3) வில்லியம்ஸ் 4) ஷானன் லீவா



27) "ஒருவருக்காக பலர், பலருக்காக ஒருவர்" என்பது எதனுடைய மகுட வாசகம்?
1) இராணுவம்
2) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
2) கூட்டுறவு இயக்கம்
4) மேற்கூறிய யாவும்

28) கூட்டுறவு இயக்கம் எத்தனையாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது?
1) 1971 2) 1740 3) 1771 4) 1675

29) இலங்கையின் கூட்டுறவு இயக்கம் எத்தனையாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது?
1) 1970 2) 1909 3) 1914 4) 1945

30) கூட்டுறவு இயக்கத்தின் விழுமியம் எது?
1) சுயசக்தி 2) சமத்துவம் 3) ஜனநாயகம் 4) மேற்கூறிய யாவும்

31) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் எது?
1) சிக்கன கடன் உதவி
2) நிவாரணம் வழங்கல்
3) குறைந்த விலையில் பொருட்களை வழங்கல்
4) மேற்கூறிய யாவும்

32) பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெறத்தேவையான வயது?
1) 18 2) 29 3) 21 4) 54

33) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வேறுபணியாக அமையாதது?
1) வங்கிச்சேவை 2) கல்விச் சேவை
3) அச்சக சேவை 4) வீதி அபிவிருத்தி

34) ஆதிகால மனிதனின் வாழ்விடம்?
1) குடிசை 2) குகை 3) கூடாரம் 4) களிமண் வீடு

35) கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட நூற்றாண்டு?
1) 19 2) 21 3) 17 4) 18

36) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்?
1) கிரகம்பெல் 2) மார்க்கோனி 3) எடிசன் 4) கலிலியோ கலிலி


37) பொருட்களைக் கொண்டு செல்ல ஆதிகாலத்தில் பயன்பட்ட வாகனம்?
1) ரிச்சாவண்டி 2) மாட்டுவண்டி
3) நீராவி புகையிரதம் 4) ஓட்டோ

38) நவீன இலத்திரனியல் கொடுப்பனவு சாதனம்?
1) ஏ.ரி.எம். 2) கடன் அட்டை 3) பணம் 4) காசோலை

39) ஆதிகால கல்விமுறை எவ்வாறு காணப்பட்டது?
1) குருகுலம் 2) மணல்தட்டு 3) கரும்பலகை 4) வகுப்பறை

40) தொழில்நுட்ப மாற்றம் நிகழ்ந்த துறை எது?
1) கைத்தொழில்
2) கல்வித்துறை
3) தொடர்பாடல்
4) மேற்கூறிய எதுவுமில்லை

# யாழ்.பல்கலை கணினிச் சங்கத்தின் தகவல் தொழில்நுட்ப ஒன்றுகூடல்





(கிரு-சிகரம்)

யாழ். ஐ.ரி.கப் மற்றும் யாழ் பல்கலைக் கழகத்தின் கணினிச் சங்கம் உடன் இணைந்து நடாத்திய 'தகவல்தொழில்நுட்ப சமூக ஒன்று கூடல்" எனும் தொனிப்பொருளில் இரண்டாவது ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 2.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலில் செனிட் மொபைல் நிறுவனத்திலிருந்து பிரியங்க சமரக்கோன் (Operations Manager), சி.ரி.ஓ. நிறுவனத்தின் தலைவர் கறீஸ்சன்யீவ மற்றும் யாழ் பல்கலைக்கழக கணினிப் பிரிவின் தலைவர் வைத்தியர் சாள்ஸ், யாழ். ஐ.ரி.கப் நிறுவனத் தலைவர் சயந்தன், யாழ் பல்கலைகழக கணினித்துறை விரிவுரையாளர் சர்வேஸ்வரன், மற்றும் ஹிமாலய கிரியேசன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கௌரி அனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கணினித் துறையினரின் கனவுத் தளமான சிலிக்கன் பள்ளத்தாக்கிலிருந்து கணினி வன்பொருள் வல்லுநர் றொமோஷன் கனகசபை skype மூலம் தொடர்பினை ஏற்படுத்தி 'Future of Hardware: What lies ahead) " எனும் தலைப்பில் ஓர் சிறப்புரையை வழங்கியிருந்தார். இவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாணவர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், பேரூந்துகளில் முக்கிய பிரச்சினையாக காணப்படும் மீதிப்பணம் பெறுவது தொடரபான பிரச்சினையை மையப்படுத்தி எதிர்காலத்தில் பேருந்துகளில் இலத்திரனியல் அட்டைகள் மூலம் பணத்தினை வாங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

# கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை

(பகீ-சிகரம்)

திருநெல்வேலி கலாமன்றம் சனசமூக நிலையத்தில் நேற்று கட்டாக்காலி நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மற்றும் சுகாதார திணைக்களம் ஆகியன இணைந்து இந்த திட்டத்தை மேற்கொள்கின்றனர்.

நாடு முழுவதும் நடைபெற்றுவரும் கட்டாக்காலி நாய்களுக்கான இந்தக் கருத்தடைச் சிகிச்சை, மன்னார் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் முடிவடைந்துள்ளதாகவும், ஏனைய மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இந்த சிகிச்சைகளில் ஈடுபட்டுவரும் மிருக வைத்தியர் ஒருவர் குறிப்பிட்டார்

பெருகிவரும் நாய் இனத்தின் எண்ணிக்கையைக் கட்டப்படுத்தும் நோக்கிலேயே இந்த கருத்தடைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சேமிப்பு வாரப் போட்டியில் தெல்லிப்பளை சங்கம் 2 ஆம் இடம்

(சிகரம்)

சமுர்த்தி அதிகார சபையினால் வருடந்தோறும் சமுர்த்தி வங்கிகளுக்கிடையில் நடாத்தப்படும் சேமிப்பு வாரப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச மகாசங்கம் 46 இலட்சம் ரூபாவைச் சேர்த்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், மல்லாகம் சமுர்த்தி வங்கி வங்கிகளுக்கிடையிலான போட்டியிலும் 36 இலட்ச ரூபா சேமிப்பைத் திரட்டி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தனிநபர் சமுர்த்தி உத்தியோகஸ்தர் சார்பில் இ.தர்மகுலசிங்கம் 10 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும், தி.பிரபாகரன் 8 இலட்சத்து 80ஆயிரம் ரூபாவும் சேமிப்பாகத் திரட்டி உள்ளனர்.

# 20 வருடங்களாக சுடுகாட்டில் வாழும் முதியவர்

(சுகன்யா-சிகரம்)

வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் சுடுகாட்டில் 70 வயதுமிக்க முதியவர் ஒருவர் தனது மனைவியுடன் சுடுகாட்டிலேயே வசித்து வருகிறார்.

20 வருடங்களாகச் சுடுகாட்டில் பிணம் எரிக்கும் தொழிலைச் செய்து வரும் இந்த முதியவருக்கு, 2 பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் திருமணம் முடித்து வேறு இடங்களுக்குச் சென்ற பின்னர், தற்போது இவரும், இவரது மனைவியும் இந்தச் சுடுகாட்டிலேயே வீடு கட்டி வசித்து வருகின்றனர்.

இந்தத் தொழிலுக்கு வந்த பின்னர் 'மனோகரா தியட்டர்' உரிமையாளர் பவளக்கால் நடராசாவின் உடலையே முதன்முதலில் எரித்தாகவும், இதுவரையில் 100,000க்கும் மேற்பட்ட பிணங்களை எரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்ட இந்த முதியவர், பிணம் ஒன்றை எரிப்பதற்கு 500 ரூபாவைக் கூலியாக வாங்குவதாகக் கூறினார்.




'மனிதனை மனிதனாக பார்ப்பது சுடுகாட்டில் தான். ஏனெனில் சாதி, மதத்தை மறந்து இறந்தவர் தனது உறவு என்ற மனநிலையையும், சுடலை ஞானத்தையும் உணர்வார்கள். சுடலை வாயிலை கடந்து சென்றால் மீண்டும் மனிதன் மிருகத் தனமாக செயற்படத் தொடங்குகிறான்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'நோயால் பாதிக்கப்பட்டு இறந்த தனது மகனுக்கு கொள்ளி வைத்து அவனுடைய பிணத்தை எரித்தமையே என்ர வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவம்' என்றும் கண்ணீருடன் கூறினார்.

# மெய்தான் பாருங்கோ...

## போரினுள் கற்றபாடம்



இந்த மாசம் வாற 19 ஆம்திகதியோடை வன்னிச்சன்டை முடிவுக்கு வந்துமூண்டு வருசமாகப் போகுது பாருங்கோ! இந்த மூண்டு வருசத்தில இரண்டு வருசம் அகதிமுகாமில இருந்திட்டு ஊருக்கு வந்த பிற்பாடு முந்தின சிரிப்பும் சந்தோஷமும் என்ர முகத்தில மட்டுமில்லை, எல்லாற்ற முகத்திலையும்தான் இல்லைக்கண்டியளே.

சும்மா ஏதோ ஒரு ஒப்புதலுக்கு றோட்டுகள், தெருவுகளில ஆளை ஆள் கண்டவுடன சிரிச்சு நடிச்சிட்டுப்போறமே யொழிய, எங்களுக்குள்ள எத்தினை குமைஞ்சு வேகி அவியுதுகளெண்டது வெளியில

இருக்கிற ஆட்களுக்குத் தெரியுதில்லை.

சரி அதுகிடக்கட்டும்! நான் இன்னொரு விசயம் சொல்ல வாறன்.வன்னியில போர் ஒண்டு நடந்தாலும் நடந்துது உதால சில நன்மையளும் கிடைச்சிருக்குது எண்டு நான் சொல்லவாறன்.

நான் உப்பிடிச் சொன்னவுடன தேசியத்துக்கு விசுவாசமான ஆட்கள் சன்னதம் ஆட வெளிக்கிட்டாலும் வெளிக்கிடுவினம் பாருங்கோ.

அவையள் சன்னதம் ஆடினால் என்ன! என்னத்தை ஆடினால் என்ன! நான் சொல்ல வந்த விசயத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்லவாறன்.

இந்தப் போர் வந்து பல்லாயிரம் பேரைப் பலியெடுத்த சங்கதி ஒருபுறமிருக்க, சிலபேருடைய மனதைப் பக்குவப்படுத்திப்போட்டும் போயிருக்குது கண்டியளே!

அதாவது பாருங்கோ! இந்தப்பூவுலகத்தில பிறந்தவனுக்கு இங்கே எதுவும் நிரந்தரமில்லை... எண்ட தத்துவத்தை விளக்கப்படுத்தியிருக்குது உந்த வன்னிப்போர். உற்றம் சுற்றம்...மாடிமனை... தோட்டம் துரவு...பேர் புகழ்...பணம் பண்டம்... அந்தஸ்து கௌரவம்... எண்டு எத்தனையோவெல்லாம் தேடிவைச்சிருந்த ஆட்கள் எல்லாம் இண்டைக்கு எங்கை?

ஆங்கார மனம் கொண்டு அடாவடித்தனமாக ஆடியது மட்டு மில்லை...அடுத்தவனை, அதுவும் தின்னக்குடிக்க வழியில்லாதவை யெல்லாரையும் தங்கட தங்கட காணிகளில வைச்சு அடிமைத் தனம் பண்ணின பணத்தடிப்பில கொஞ்சம் வீக்கமான ஆட்கள் எல்லாம் செட்டிகுளம் - அகதிமுகாமில குழாய்க்கிணத்தடியில தண ணியெடுக்க ஒரு கியூவிலையும், 'ரொய்லெட்டுக்கு' இன்னொரு கியூவிலையும், சாப்பாட்டுக்கு...ரேசன் எடுக்கிறதுக்கெண்டு இன்னொரு கியூவிலையும் உடுத்த உடுப்போடை நிண்டதை நேரடியாகப் பாத்தவன் இந்தச் சின்னக்குட்டி சின்னச்சாமி. நான் இப்ப இதில வந்து எவரையும் தாக்கிப்பேசுறதாக நினைக்கக்கூடாது கண்டியளே! நான் சொல்லுறனெண்டு நீங்கள் என்ர வாயைப் பொத்த வந்தீங்களெண்டால், காலவரலாறு தன்ர பக்கத்தில நான் சொன்ன விசயங்களை ஏற்கனவே பதிஞ்சுபோட்டுப் போயிருககுது! அதுக்கென்ன செய்யப்போறியள்?

வேதத்தில ஒரு வசனம் இருக்குது கேள்விப்பட்டனிங்களே!

"ஆண்டவர் கட்டளையிடாதிருக்க காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?" எல்லாம் அவன் செயல் கண்டியளே! காரணமில்லாமல் காரியமில்லை : காரியமில்லாமல் காரணமில்லை...எண்டு எங்கட முன்னோர்கள் சொல்லுறவை. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கண்ணா...எண்டு கண்ணதாசன்ர சினிமாப்பாட்டுமொண்டு இருக்குது. எல்லாம் ஒரு கார ணத்தோடைதான் எதுவும் நடக்கும். காலத்தின் பின்னைய சூட்சு மத்தின் முடிச்சை அவிழ்க்கிறதுக்காக கடவுள் முன்னைய நிகழ் காலத்தில சில மூர்க்கத்தனமான காரியங்களை நடப்பித்துக் காட்டுகிறான் பாருங்கோ!

அதுக்காக பிரபாகரன் போராட்டத்தைத் தொடங்கினது சரி யெண்டும், ஆமிக்காரன் ஷெல் குத்தினது நியாயமெண்டும், சனங்கள் எல்லாம் சாகவேண்டிய ஆட்கள்தானெண்டும் நான் சொல்ல வரேல்லை.

சிலநேரங்களில சில காரியங்களை மனிசன்ர புத்திக்கு எட்டர்தவாறு இறைவன் நடப்பிக்கேக்கை சிலர் தெளிகிறார்கள்! சிலர் அழிகிறார்கள். போருக்குள் அழிந்தவர் அழிந்துபோக, எஞ்சிய வர்களில சிலர் தெளிந்திருக்கிறார்கள்.


ஆமி வாறான்...எண்டிட்டு மன்னாரிலயிருந்தும், மணலாற்றில யிருந்தும் வெளிக்கிட்ட' சனங்கள் கடைசியாக முள்ளி வாய்க்காலில முற்றுப்பெற்று நிண்டபோது... அவையள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள்...

என்ன சொல்லுது?

மனிசனாய் பிறந்தவனுக்கு எதுவுமே உயிரோடு இருக்கும் வரைக்கும் உரிமையில்லை. எனக்கும் இப்ப உந்தச் சிந்தனை தான் மனசில உதிச்சிருக்குது. முள்ளிவாய்க்காலோடை நானும் தெளிஞ்சிட்டன். இனி ஆரோடையும் மனஸ்தாபப்பட்டு வாழ விரும் பேல்லை. யாராவது அன்பாகப் பழகிவிட்டு கதைக்காமல் இருநதால் அது எனக்கொரு அந்தர மனப்பான்மையாக இருக்கும். அதாலை நானே வலியப்போய் சம்பந்தப்பட்ட ஆட்களோடை ஒப்புரவாகி விடுகிறன் பாருங்கோ!

இது 'வன்னிப்போர் கற்றுத்தந்த பாடம்' எண்டது இஞ்சை கனபேருக்குத் தெரியாத சங்கதிதான் கண்டியளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.




# ஜனாதிபதி வேட்பாளர் பி.ஏ.சங்மாவுக்கு ஜெயலலிதா முழுமையான ஆதரவு

(சென்னை)

ஜனாதிபதி தேர்தலில் மக்களவை முன் னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மாவுக்கு ஆதரவ ளிக்கப் போவதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பதவி காலம் ஜூலை மாதம் முடிவடைகிறது. இதையடுத்து, அடுத்த ஜனாதிபதியாக யார் வருவார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தங்களின் ஆதரவு பெற்றவரை ஜனாதிபதியாக தேர்வு செய்ய காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட தேசிய கட்சிகள் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றன.

காங்கிரஸ் கட்சி அதன் கூட்டணிக் கட்சிகளுடனும், வடமாநிலங்களின் முக்கிய கட்சிகளின் ஆதரவைக் கோரி வருகிறது. பா.ஜ.க.வும் தனது ஆதரவு கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

இதுவரை ஜனாதிபதி வேட்பாளராக யாரை நியமிக்கப் போகிறோம் என்று எந்த கட்சியும் அதிகாரப்பூர்வமாக இது குறித்து ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மக்களவை முன்னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மா கடந்த 15ம் தேதி சென்னையில் என்னை சந்தித்து பேசினார். முன்னதாக சமீபத்தில் சென்னை வந்த ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கிடம் நடத்தப்பட்ட ஆலோசனையின் அடிப்படையிலும், அதிமுகவில் நடத்தப்பட்ட ஆலோசனையின் அடிப்படையிலும் இந்தியாவின் உயரிய பதவியான ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக



நிறுத் தப்பட்டுள்ள பி.ஏ.சங்மாவை அ.தி. மு.க ஆதரிக்க முடிவு செய் துள்ளது.

கடந்த 60 ஆண்டுகளாக இந்திய ஜனாதிபதியாக பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பதவி வகித்து வந்துள்ளனர். ஆனால், இதுவரை ஒரு பழங்குடியின சமூதாயத்தைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாக நியமிக்கப்படவில்லை. பி.ஏ.சங்மா பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர் மட்டுமல்லாமல் இந்தியாவின் ஜனாதிபதிக்கான அனைத்து தகுதிகளையும் கொண்டவர்.

எனவே, அவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க ஆதரவு தருவதில் அ.தி.மு.க பெருமையடைகிறது எனத் தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் ஜனாதிபதி வேட்பாளர்? அடுத்த வாரம் முடிவாகும்



(சென்னை)

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அடுத்த வாரம் டில்லியில் முக்கிய தலைவர்கள் பங்கேற்கும் விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் வழங்கவுள்ள விருந்துக்குப் பிறகு தான், ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளருக்கு ஆதரவு கோரி முக்கிய தலைவர்களுடன் இறுதி சுற்றுப் பேச்சு வார்த்தையை, சோனியாவே நடத்துவார் என, காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

காங்கிரஸ் சார்பில் இதுவரை எநத ஒரு பெயரையும், அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. இருப்பினும், பிரணாப் முகர்ஜி, ஹமீத் அன்சாரி ஆகியோரின் பெயர்களே முன்னிலையில் இருக்கின்றன. ஊடகங்களில் அடிபடும் இந்த பெயர்களை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளவோ, மறுக்கவோ ,செய்யாமல், வெறுமனே ஆழம் பார்த்து வருகிறது. இந்நிலையில், இவர்களைத் தவிர வேறு பெயர்கள் எதுவும் காங்கிரஸ் தரப்பில் இல்லையெனத் தெரிகிறது. காங்கிரஸ் யாரை நிறுத்தினாலும், அந்த நபரை மம்தா பானர்ஜி, முலாயம் சிங், மாயாவதி என, அரசை ஆதரவு தரும் முக்கிய கட்சிகள் ஆதரிக்கும் சூழலே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆதீன எதிர்ப்பாளர்களை ஆசீர்வதித்துள்ளேன்

## நித்தியானந்தா



(மதுரை)

ஆதீன மீட்புக்குழுவில் உளளவர்களில் பலர், மறைமுகமாக என்னை தேடி வந்து ஆசீர்வாதம் பெற்றுச்சென்றனர். எதிர்ப்பாளர்களின் போராட்டம் பிசுபிசுத்து போகும், என நித்யானந்தா கூறினார்.

மதுரையில் நேற்றுமுன்தினம் அவர் தெரிவிக்கையில்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் எனக்கு எதிராக கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்தவர்கள், ஆதீன சொத்துகள் மீது சட்ட விரோதமாக அமர்ந்திருப்பவர்கள். கறுப்புக்கொடி காட்டியவர்கள் அரசின் நூறு நாள் வேலை திட்டத்தில் பணி செய்பவர்கள் என தெரியவந்தது. இது குறித்து அம்மாவட்ட கலெக்டரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட வேலையாட்களின் அடையாள அட்டைகளை பறிமுதல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனக்கு எதிராக மே 27 இல், நெல்லையில் பேரணி நடத்தப் போவதாக நெல்லை கண்ணன் அறிவித்துள்ளார்.

அதே நாளில் ஆதீன பாது காப்புக் குழு சார்பில் பேரணி நடத்தப்படும். எந்த போராட்டத்தையும் பாதுகாப்புக் குழு எதிர்கொள்ளும். சங்கரமடத்தில் இருந்து பிரதிநிதி வருவதாக கூறியிருக்கிறார்கள். என்னை பற்றி கூறிய கருத்தை வாபஸ் பெற போவதில்லை, என ஜெயேந்திரர்தான் சொன்னாரா என தெரியவில்லை. செருப்பு வீச்சு தொடர்பாக, சம்பவ இடத்தில் இல்லாதவர் கைது செய்யப்பட்டதை சட்டப்படி எதிர்க்கொள்வோம்.




# மேலே இருப்பவன் பார்ப்பான்



(செங்கல்பட்டு)

சட்டசபைக்கு விஜயகாந்தை வரச் சொல் என்கின்றனர். நான் வந்தால், பஸ் கட்டணம், பால் விலை, மின் கட்டணத்தை குறைத்துவிடப் போகிறார் களா? மேலே இருக்கும் ஆண்டவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான் என, விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு தொகுதியில் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்க வந்த தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த், பழைய பஸ் நிலையம் அருகில், கட்சி சார்பில் பொதுமக்களுக்கு, இரண்டு லொரிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்து, நலத் திட்ட உதவிகளை வழங்கிப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

நான் எனது கட்சி எம்.எல்.ஏ.க்க ளின் தொகுதிகளுக்குச் சென்று குறைகளைக் கேட்டு வருகி றேன். இங்கு மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு எந்த சுகாதாரமும் இல்லை. ஓராண்டு சாதனை என்கின்றனர். மணல் கொள்ளையர்களிடமிருந்து 13 கோடி அபராதம் வசூலித்துள் ளோம் என அமைச்சர் சொல்கிறார்.

முதல்வர் மணல் கொள்ளை என் கவனத்திற்கே வரவேயில்லை என்கிறார். உங்களுக்குள்ளேயே இந்த மாதிரி இடைவெளி ஏன்? மணல் கொள்ளை அமோகமாக நடக்கிறது. மணலை மரத்திற்கு மேல் குவித்து வைத்துள்ளனர்.

# புதுக்கட்சி ஆரம்பிக்க எடியூரப்பா முடிவு

(பெங்களூர்)

பா.ஜ.க.விலிருந்து விலகி விலகி புதுக்கட்சி ஆரம்பிக்க எடியூரப்பா முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கர்நாடகா முன்னாள் முதல்வர் எடியூரப்பா, ஊழல் புகாரில் சிக்கியதால், பாரதீய ஜனதா மேலிடம் அவரை பதவியில் இருந்து நீக்கியது. அவருக்கு பதிலாக சதானந்தா கவுடா முதல்வராக்கப்பட்டார்.

ஊழல் வழக்கில் இருந்து காப்பாற்ற கட்சி மேலிடம் எடியூரப்பாவுக்கு உதவவில்லை என்றும், காங்கிரஸ் தலைவர்கள் ஏதாவது புகார்களில் சிக்கிக் கொண்டால், அவர்களை காப்பாற்ற சோனியா காந்தி முயற்சி செய்வார். ஆனால், பாரதீய ஜனதாவில் அப்படி இல்லை. புகாரில் சிக்குபவர்களை ஒழித்துக்கட்ட பார்ப்பார்கள் என்று குற்றம் சாட்டினார்.

எடியூரப்பா விவகாரத்தில் கட்சி மேலிடம் ஒதுங்கி இருப்பது, எடியூரப்பாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. சமீபத்தில் இவரது ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் மற்றும் நான்கு மந்திரிகள், இவரிடம் ராஜினாமா கடிதம் அளித்தனர். அப்போது, தன் மீது குற்றம் சாட்டிய கர்நாடக முதல்-மந்திரி சதானந்தா கவுடா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிய எடியூரப்பா அதை நிறைவேற்ற கட்சி மேலிடத்துக்கு காலக்கெடுவும் விதித்தார்.

பின்னர் அருண்ஜெட்லி உள்ளிட்ட தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று, அமைதியானார். எனினும், பாரதீய ஜனதா கட்சியில் தொடர்ந்து இருக்க எடியூரப்பாவுக்கு விருப்பம் இல்லை. எனவே தனிக்கட்சி தொடங்க எடியூரப்பா தீர்மானித்துள்ளார் என்றார்.


# 101 வயதுப் பாட்டியின் பிறந்தநாள் கொண்டாட்டம்

(காரைக்கால்)

காரைக்காலில் சதம் அடித்த மூதாட்டி நேற்றுமுன்தினம் 101 பிறந்த நாளை கொண்டாடினார். காரைக் கால் திருப்பட்டினம் மெயின் ரோட்டைச் சேர்ந்த சட்டையப்பர் மனைவி அஞ்சலை அம்மை 101. இவரது கணவர் 1948 ஆம் ஆண்டு இறந்தார்.

இவருக்கு 4 மகன்கள், 3 மகள்கள் உள்ளனர். இளைய மகன் மகாதேவன் கவனிப்பில் அஞ்சலை வாழ்ந்து வருகிறார். 100 வயதைக் கடந்த மூதாட்டிக்கு மகன், மகள், பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன், கொள்ளு பேத்தி என மொத்தம் 50 பேர் உள்ளனர். கண் பார்வை மட்டும் இழந்து, 100 வயதைத் தாண்டிய மூதாட்டி, அன்றாட வேலைகளை, தானே செய்து கொள்கிறார்.

சிறுசிறு வேலைகளுக்கு பேரன் கொள்ளுபேரன்கள் உதவி செய்கின்றனர். அஞ்சலை அம்மையின் 101 வது பிறந்த நாள் விழா அவரது இல்லத்தில் கொண்டாடப்பட்டது. விழாவில் மூதாட்டியின் மகன், மகள் மற்றும் பேரன், கொள்ளுப் பேரன் பேத்திகள் அனைவரும், கலந்துகொண்டனர்.



# பாகிஸ்தான் தண்டவாளத்தில் இந்திய ரயில் இயந்திரங்கள்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு, 50 ரயில் இன்ஜின்களை குத்தகைக்கு கொடுப்பது குறித்து ரயில்வே துறை பரிசீலித்து வருகிறது.


இதுதொடர்பாக ரயில்வே உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

பாகிஸ்தானுக்கு டீசலில் ஓடும் 3,000 குதிரை திறன் கொண்ட 50 ரயில் இன்ஜின்களை மணிக்கு 1,500 ரூபாய் என்ற அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதனுடன், இந்திய ரயில் இன்ஜினகளை ஓட்டுவதற்கான பயிற்சியும பாகிஸ்தான் ரயில்வே துறையைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படஉள்ளது.

ரயில் இன்ஜின்களை குத்தகைக்கு வழங்கும் திட்டத்திற்கு வெளியுறவு அமைச்சகம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கி விட்டது. அதனால் இன்ஜின்களை வழங்குவதற்கான வழிமுறைகள் குறிதது தற்போது ஆலோசிக்கபபட்டு வருகின்றன. வங்கதேசம், இலங்கை, வியட்நாம், மியான்மர், முசாம்பிக், தான்சானியா மற்றும் கானா போன்ற நாடுகளுக்கு இந்திய ரயில்வே அவ்வப்போது ரயில் இன்ஜின்களை வழங்கியுள்ளது.

தற்போது முதன்முறையாக, பாகிஸ்தானுக்கு வழங்கவுள்ளது. ஏனைய நாடுகளுக்கு எல்லாம் ரயில் இன்ஜின்களை விலைக்கு விற்கும் நிலையில் முதன்முறையாக பாகிஸ்தானுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குகிறது. ஏனெனில் பாகிஸ்தான் இவற்றை குததகை அடிப்படையில் தான் வாங்க விருப்பம் தெரிவித்துள்ளது. ரயில்வே துறை சார்பில் ஆண் டிற்கு 250 டீசல் ரயில் இன் ஜின் கள் உற்பத்தி செய்யப்படு கின்றன.

# அணு உலைகளை திறக்கிறது வடகொரியா
## அமெரிக்கா குற்றச்சாட்டு



அணு ஆயுத மேம்பாட்டிற்காக வடகொரியா அணு உலை கட்டுமானப் பணியினை தொடங்கி உள்ளத்தாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு என்.ஜி.ஓ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, வடகொரியா கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாங்க்பையோன் நகரில் யுரேனியம் செறிவூட்டல் மையத்தினை திறந்தது.

இதன் மூலம் அணுகுண்டு சோதனை நடத்த திட்டமிட்டுள்ளது. மேலும் அணு ஆயுத மேம்பாட்டிற்காக அணு உலைகளையும் திறக்க உள்ளது. இதற்கான கட்டுமானப்பணிகள் பையோங்கோங் நகரில் யாங்க்பையோன் பகுதியில் நடந்து வருகிறது.

இதற்கான பணிகள் நடந்து வருவதை கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வர்த்தக ரீதியில் அனுப்பி வைக்கப்பட்ட சாட்டிலைட் ஒன்று புகைப்படத்துடன் ஆதாரம் வெளியிட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இது குறித்து வடகொரியா மறுப்பு தெரிவித்துள்ளதுடன், மின்சக்தி தேவைக்காகவே யுரேனியம் மற்றும் புளுட்டோனியம் அடிப்படையிலான அணு உலைகளை திறக்க உள்ளதாக கூறி வருகிறது.

# சாப்பாட்டை மீதம் வைத்தால் அபராதம்



பிரிட்டனில் உள்ள சீன ஹோட்டலில் சாப்பிடுபவர்கள், சாப்பிட்ட தட்டில் உணவுகளை மீதம் வைத்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. பிரிட்டனில் சவுத் ஹீல்ட்ஸ் பகுதியில் சீன ஹோட்டல் ஒன்று உள்ளது. இந்த ஹோட்டலில் சாப்பிடுபவர்கள், சாப்பிட்ட தட்டில் உணவு பொருட்களை மீதம் வைத்தால், அவர்களுக்கு 20 பவுண்ஸ் வரை அபராதம் வசூலிக்கப்படுகிறது.

முன்னதாக இந்த ஹோட்டலில் சாப்பாடு பரிமாறுபவர்கள் சாப்பிட வருபவர்களிடம் இது குறித்து தகவல் தெரிவித்து விடுகின்றனர். அதுமட்டுமல்லாது, சாப்பாட்டை மிச்சம் வைத்தால் அபராதம் வசூலிக்கப்படும், என்ற அறிவிப்பும் வைக்கப்பட்டுள்ளது. இதை மீறி சாப்பிட்ட தட்டில் உணவை வீணாக்குபவர்களுக்கு, உணவு கட்டணத்துடன் அபராதமும் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. சாப்பாடு பிடிக்காமல் மீதம் வைத்த பலரிடம் அபராதம் வசூலிக்கப்பட்டதால், அவர்கள் இந்த ஹோட்டல் நிர்வாகத்தை திட்டி விட்டு செல்கின்றனர். இருப்பினும் தாங்கள் கொண்ட கொள கையை மாற்றி கொள்ள போவதில்லை என, ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# இடைக்கால அமைச்சரவை கிரீஸில் பதவியேற்பு



கிரீஸ் நாட்டில் சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில், எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாததால் இடைக்கால பிரதமராக பனோஜியோடிஸ் பிக்ரமெனோஸ்(வயது 67) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள கிரீஸ் நாட்டில் கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. இந்த நாட்டில் கடும் நிதி நெருக்கடி நிலவுகிறது.

இந்த நிலையை சரி செய்ய எந்தக் கட்சியும் உரிய வாக்குறுதி அளிக்கவில்லை. இதையடுத்து இந்ததேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனையடுத்து கூட்டணி ஆட்சி அமைக்க சோஷலிஸ்ட் கட்சி அழைப்பு விடுத்தது. ஆனால இந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

இந்நிலையில் மீண்டும் அடுத்த மாதம் 17ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. இதையடுத்து இடைக்கால பிரதமராக மூத்த நீதிபதி பனாஜியோடிஸ் பிக்ரமெனோஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இடைக்கால நிதியமைச்சராக ஏதென்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ஜியோர்கோஸ் சானியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். தூதராக இருந்த பெட்ராஸ் மோலிவியாட்டிஸ் வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

இடைக்கால பிரதமர் பனாஜியோடிஸ் பிக்ரமெனோஸ் தலைமையிலான,16பேர் கொண்ட அமைச்சரவை பதவி ஏற்றது.

## ஜப்பான் ஏவுதளத்திலிருந்து செயற்கைக்கோளை அனுப்பியது தென்கொரியா



புவியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக செயற்கைக் கோள் ஒன்றை தென்கொரியா அனுப்பியுள்ளது.

தென்கொரியா நாட்டிற்கு சொந்தமான செயற்கோள் ஒன்றை ஜப்பான் விண்ணிற்கு அனுப்பியுள்ளது.

ஜப்பானின் காகோஷிமா பகுதியில் அமைந்துள்ள டானேகீமா ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து இன்று அதிகாலை 1.30 மணியளவில் விண்ணில் செலுத்தப்பட்டது.

இதுகுறித்து தென்கொரியா, புவியியல் குறித்த் ஆய்வை மேற்கொள்வதற்காக செயற்கை கோளை அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# ஆற்றில் பாய்ந்தது பேருந்து வியட்நாமில் 34 பேர் பலி



வியட்னாமில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் 34 பேர் பலியானதுடன் மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

வியட்னாமின் மத்திய பகுதி நகரான பியு வோன் மா தௌட்டிலிருந்து தெற்கிலுள்ள ஹோசி மின் நருக்கு நேற்று காலை புறப்பட்ட இந்த பேருந்து சேரேபோக் ஆற்றுக்குள் வீழ்ந்தது.

இவ்விபத்துக்கான காரணத்தை கண்டறிவதற்கும் பாதிக்கப்பட்டவர்களை இனம்காண்பதற்கும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

32 பயணிகளுடன் பேருந்து சாரதிகள் இருவரும் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 21 பேரில் 16 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மியன்மார் மீதான தடைகளை நீக்கியது அமெரிக்கா

மியன்மார் மீது விதிக்கப்பட்டிருந்த சில பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்கியுள்ளது.

மியன்மாரில் ஏற்பட்டுவரும் ஜனநாயக மாற்றங்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹில்லரி கிளின்டன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 22 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக மியன்மாருக்கான அமெரிக்கத் தூதுவரும் பெயரிடப்பட்டுள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசாங்கம் ஒன்றின் செயற்பாடுகளுக்கு மியன்மாரில் தற்போது சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா கருதுகின்றது. எனினும் இராணுவத்தின் தலையீடு அரசாங்கத்தினுள் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

# பாகிஸ்தானில் விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து



பாகிஸ்தானில் இரு விமானப்படை விமானங்கள் நேருக்கு நேர மோதிக் கொண்டதில் விமானிகள் நால்வர் பலியாயினர், மேலும் தரையில் நடந்து கொண்டிருந்த ஐந்து பேர் காயமடைந்தனர்.

ரிசால்பூர் நகருக்கு அருகிலுள்ள விமானப்படை கல்லூரியிலிருந்து புறப்பட்ட இந்த விமானங்கள், நவ்ஷேரா நகரில் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் விமானிகள் நால்வரும், தரையில் நடந்து கொண்டிருந்த ஐந்து பேர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக பொலிஸ் அதிகாரி பஸீல் கான் தெரிவித்துள்ளார்.

# நைகரில் சிறுவர்கள் போசணைக் குறைபாடு



நைகரில் சிறுவர்கள் மத்தியில் போசனைக் குறைபாடுகள் அதிகரித்துள்ளதாக சர்வதேச நிறுவனம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ஆறு மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள், போசனைக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மருத்துவ தேவைகள் அதிகரித்துள்ளமை இந்த ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

நைகரில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினைகள், சிறுவர்கள் மத்தியில் போசனைக் குறைபாடுகள் அதிகரித்துள்ளமைக்கு பிரதான காரணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜி எட்டு நாடுகளின் மாநாட்டில் இந்த உணவுப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.சர்வதேச ரீதியில் 25 வீதத்துக்கும் அதிகமான சிறுவர்கள் போசனைக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லண்டன் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை காண்பதற்கு ஈரான் ஜனாதிபதி லண்டன் செல்லக்கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து ஈரான் ஜனாதிபதி கூறுகையில், ஈரான் வீரர்களின் பக்கமிருந்து அவர்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். ஆனால் ஒலிம்பிக்கை நடத்தும் நாட்டுக்கு இந்த விடயத்தில் நிறைய பிரச்சினைகள் இருக்கக்கூடும் என தெரிவித்தார்.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

**17-05-2012 முதல் 28-05-2013 வரை**

## விருச்சிகம்



விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: தோ, ந. நி, நே, நோ, ய, யி, யு உள்ளவர்களுக்கும்)

சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றிக் காட்டும் விருச்சிக இராசி நேயர்களே!

கனவுப் பலிதமும் வாக்கு பலிதமும் மிக்கவர் நீங்கள். கண்டிப்பும் உங்களிடம் இருக்கும். கனிவும் இருக்கும்.

உங்கள் இராசிக்கு வாக்கு ஸ்தானாதிபதியாகவே குரு விளங்குவதால் தான் செல்வாக்கும் புகழும் சீக்கிரமே உங்களுக்கு வந்து சேருகிறது. உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் இப்பொழுது ஏழாமிடத்தில் சஞ்சரித்து அதன் இனிய பார்வையை உங்கள் இராசியில் பதிக்கப் போகிறார்.

அப்புறமென்ன. குரு பார்க்க கோடி நன்மையல்லவா. நீங்கள் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். இனி தினமும் விருந்துகளும் விழாக்களும் உங்கள் வீடு தேடி வந்து கொண்டே இருக்கும்.

குருவின் பார்வை பலத்தால் உங்கள் இராசி புனிதமடைவதோடு 3, 11 ஆகிய இடங்களும் புனிதமடைவதால் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரப்போகிறது.

குறிப்பாக ராகு திசை, கேது திசை, ராகு புத்தி, கேது புத்தி, சுக்ர திசை, சுக்ரபுத்தி நடப்பவர்கள் சிறப்பு பரிகாரங்களை மேற்கொண்டால் செல்வநிலை உயர்ந்து செல்வாக்கு மேலோங்கும். ஜென்மத்தில் ராகு இருப்பதால் சர்ப்ப சாந்தியையும் முறையாகச் செய்தால் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

### குருப் பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை 6இல் சஞ்சரித்து வந்த குருபகவான் 17.5.2012 முதல் 7ஆம் இடத்தில் சஞ்சரித்து இனிய மாறறங்களை வழங்கப் போகிறார். அதன் பார்வை பதியும் இடங்களையெல்லாம் புனிதப்படுத்துவார். ஆரோக்கியத்தை சீராக்கி ஆனந்தப்படுத்துவார். சீரும் சிறப்பும் செல்வாக்கும் வழங்குவார். காரிய வெற்றிக்கும் உறுதுணையாக இருப்பார்.

குறிப்பாக உங்கள் இராசியைப் பார்க்கும் குருவை முன்னதாகவே நீங்கள் வரவேற்க வேண்டும். வரும் முன்னரே வரவேற்று வழிபட்டால் தரும் பலன்கள் ஏராளமாக இருக்கும். குறிப்பாக அவிட்ட நட்சத்திரமும் ஞாயிற்றுக்கிழமையும் இணையும் நாளில் குருப்ரீதி செய்வதன் மூலம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

### சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு

உங்கள் இராசிக்கு 2, 5இற்கு அதிபதியான குரு பகவான் இப்பொழுது சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். குருவின் நேர் பார்வை உங்கள் இராசியில் பதியப் போகிறது.

எனவே மணவாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பகல் இரவாகப் பாடுபட்டதற்கு ஏற்ற பலனும் வந்துசேரும்.

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு இன்னும் பலன் அதிகம். சுக்ரன் வீட்டில் இருந்து குரு பார்ப்பதால் சுகங்களையும் சந்தோஷங்களையும் மாறி மாறி வழங்கப் போகிறார். தொழில் வளர்ச்சி ஆச்சரியப்படும் விதத்தில் அமையும்.

எதிர்காலம் சிறப்படைய நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வரன்கள் வாயிற்கதவைத் தட்டும். மணமாலை சூடுவதற்கான வாய்ப்புகள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

வருமானம் திருப்தி தரும். இந்த நேரத்தில் வாங்கல், கொடுக்கல்களையெல்லாம் ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கட்டிடம் கட்டுவது முதல் கல்விக்காக எடுத்த முயற்சி வரை கைகூடும்.

ஏழாமிடம் என்பது விவாக ஸ்தானம், களத்திர ஸ்தானம் மட்டுமல்ல. கவர்ச்சியாகப் பேசும் ஆற்றல், வாழ்க்கை அமைப்பு, சமுதாய அந்தஸ்து, பிள்ளைகள் சொற்படி கேட்டல், வாகன யோகம், பயணத்தால் பலன், வெளிநாட்டு யோகம், ஆடை, ஆபரண சேர்க்கை, வியாபார யுக்தி, சுகபோகங்கள் அனைத்தையும் விளக்கும் இடமாகவே அது அமைகிறது.

வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வளர்ச்சிப் பாதை சிறப்பாக அமையும். தூரதேசப் பயணங்களால் தொகை வந்து சேரும். செயல்திறன் மிக்கவர்கள் உங்களுக்கு வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர். உடல்நிலை இனி மருந்து சாப்பிடாமலேயே மகிழ்ச்சிதான். விருதுகளும், வெற்றி வாய்ப்புகளும் தேடி வரும்.

### குருவின் பார்வை பலன்கள்

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 3, 11 ஆகிய இடங்களில் பதிவதோடு, உங்கள் இராசியிலும் நேரடியாகப் பதிகிறது. எனவே எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். உடன்பிறப்புகள் முதல் உடன் இருப்பவர்கள் வரை உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும். பணப்பற்றாக்குறை அகலும்.



புதிய தொழில் தொடங்கும். திட்டங்கள் கை கூடும். பழைய பணியாளர்களை நீக்கி விட்டுப் புதியவர்களை தேர்ந்தெடுத்து வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொள்வீர்கள்.

நல்லவர்களின் சந்திப்பால் நலம் காண்பீர்கள். கலைத்துறை, பத்திரிகைத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இடம், பூமியால் இலாபம உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கைகளும் அதிகரிக்கும் விதத்தில் இந்த குருப்பெயர்ச்சி உங்கள் கனவுகளையெல்லாம் நனவாக்கப் போகிறது.

### வாட்டத்தை போக்குமா வக்ர குரு

ரிஷப இராசியில் சஞ்சரிக்கும் குரு 12.10.2012 முதல் 6.2.2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்த வரை 2, 5இற்கு அதிபதியாக விளங்கும் குரு வக்ர கதியில் இயங்கும் நேரத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். குடும்பச் சுமை அதிகரிக்கும்.

பழைய வாகனங்களால் பழுதுச் செலவு ஏற்படும். புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் நிறைவேறும். குழநதைகளின் எதிர்கால நலன் கருதி எடுக்கும் முயற்சிகளுக்கு மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

### விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குருப்பெயர்ச்சியால் இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். மாலை வாய்ப்புகளும் மழலைப் பேறுகளும் கிட்டும். வேலைக்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு வியக்கும் செய்தி வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். பாசம் பொங்கும். பொருளாதார நிலை முன்னேற்றம் தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உங்கள் பெயரிலேயே கட்டிடம் கட்டுவது, சொத்துக்கள் வாங்குவது, தொழில் தொடங்குவது போன்றவை ஏற்படும். (தொடரும்)

---

# சத்தியம் தவறாத பசுவின் கதை

**- என்.கணேசன்**

**கன்னட** மொழியில் பாடப் புத்தகங்களில் வைக்கப்பட்டுள்ள மிக அற்புதமான பாடல் ஒன்று. சத்தியத்திற்காகத் தன் உயிரையும் தரத் துணிந்த புண்யகோடி என்ற பசுவின் கதை. ‘சத்தியமே இறைவன் என்ற புண்யகோடியின் கதையிது’ என்று ஒவ்வொரு பந்தியின் இறுதியிலும் முடியும் அந்த பாடல் சொல்லும் கதை இது தான்:

ஒரு செழிப்பான கிராமத்தில் காளிங்கன் என்ற இடையன் பல பசுக்களை பராமரித்து வருகிறான். அவன் ஒரு அதிகாலையில் தன் பசுக்களை அழைதது்த் தனக்குத் தேவையான அளவு மட்டுமே பாலைக் கறந்து கொண்டு மீதியைத் தங்கள் கன்றுகளுக்குத் தர அவற்றை அனுப்பி விடுகிறான். அந்தப் பசுக்களும் தங்கள் கன்றுகளைச் சேர காட்டு வழியே செல்கின்றன.

பசுக்கள் சென்ற வழியில் கடும்பசியோடு அற்புதா என்ற புலி இரை நோக்கிக் காத்திருந்தது. கடும் சீற்றத்துடனும், கர்ஜனையுடன் பசுக்கூட்டத்தின் நடுவே தாவியது. பசுக்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓட்டம் எடுத்தன. ஆனால் புண்யகோடி என்ற பசு மட்டும் அந்தப் புலியிடம் மாட்டிக் கொண்டது.

புண்யகோடியைக் கொன்று தின்னப் புறப்பட்ட புலியிடம் புண்யகோடி மிகுந்த துக்கத்துடன் வேண்டிக் கொண்டது. ‘புலியே என் கன்று மிகுந்த பசியுடன் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும். நீ எனக்கு சிறிதே சிறிது அவகாசம் கொடுத்தால் நான் அதற்குப் பால் கொடுத்து விட்டு, அனாதையாகப் போகும் என் கன்றை மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு வந்து விடுகிறேன். பிறகு நீ என்னை உண்டு பசியாறுவாயாக’.

புலி சொன்னது. ‘நான் சிறிது காலமாக இரை கிடைக்காமல் கடும் பசியோடு இருக்கிறேன். உன்னை விட்டு விட்டால் நீ தப்பித்து விடுவாய். கண்டிப்பாக திரும்பி வர மாட்டாய். உன்னை விடுவதற்கு நான் என்ன முட்டாளா?’

புண்யகோடி உருக்கமாகச் சொன்னது. ‘புலியே சத்தியமே என் தாய், தந்தை, நட்பு, உறவு எல்லாமே. நர்ன் சத்தியம் செய்து சொல்கிறேன். கண்டிப்பாக என் கன்றுக்குக் கடைசியாகப் பால் கொடுத்து விட்டு வருவேன். என்னை நம்பு’

புலிக்கு புண்யகோடியின் உருக்கம் மனதை அசைத்திருக்க வேண்டும். புண்யகோடியைச் செல்ல அனுமதித்தது. புண்யகோடி தன் இருப்பிடத்திற்கு வந்து தன் கன்றிடம் நடந்ததைச் சொல்லி விட்டு சொன்னது. ‘மகனே கடைசியாக பாலருந்திக் கொள். நான் சீக்கிரம் அந்தப் புலியிடம் செல்ல வேண்டும். வாக்குக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். இனி எக்காலத்திலும் நீ அந்த வழியில் சென்று அந்தப் புலியிடம் மாட்டிக் கொள்ளாதே. எச்சரிக்கையாக இரு’

பால் குடித்த கன்று பசுவைப் போக அனுமதிக்கவில்லை. ‘தாயே இனி எனக்கு பசித்தால் பால் தர யாரிருக்கிறார்கள்? என்ன்னை யார் பார்த்துக் கொள்வார்கள்? நான் யாருடன் இருப்பேன்? என்னை அனாதையாக விட்டு விட்டுச் சென்று விடாதே. நீ இங்கேயே இருந்து விடு’.

அதை ஏற்றுக் கொள்ளாத புண்யகோடி தன் உறவுப் பசுக்களை எல்லாம் அழைத்து உருக்கத்துடன் வேண்டிக் கொண்டது. ‘என் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள். கொடுமைப் படுத்தி விடாதீர்கள். அதனை அனாதையாக்கி விடாதீர்கள். அதனைக் கருணையோடு நடத்துங்கள்’

அந்தப் பசுக்களும் புண்யகோடியைப் போக வேண்டாமென்றன. அங்கேயே இருந்து விடச் சொல்லி வற்புறுத்தின. புண்யகோடி மறுத்து விட்டது. ‘நான் வாக்கு மாற மாட்டேன். என் குழந்தையை மட்டும் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கு அது போதும்’ என்று கிளம்பியது. பசுக்களும், புண்யகோடியின் கன்றும் பெரும் துக்கத்துடன் புண்யகோடியை வழியனுப்பி வைத்தன.



புலியிடம் வந்து நின்ற புண்யகோடி சொன்னது. ‘புலியே நான் சொன்னபடி வந்து விட்டேன். கடும் பசியுடன் இருந்த உன்னைக்காக்க வைத்து நான் உனக்கு தவறிழைத்து விட்டேன். இனி என்னைத தின்று நீ பசியாறுவாயாக’

சொல்லி விட்டு அதன் முன் மண்டியிட்டு புண்யகோடி படுத்துக் கொண்டது. அதனையே பார்த்துக் கொண்டிருந்த புலிக்கு புண்யகோடியின் சத்தியம் தவறாமையும், உயர்வான தன்மையும் என்னவோ செய்தன. அந்தக் கணத்தில் மனமாற்றம் அடைந்த புலி சொனனது. ‘உன்னைப் போன்ற ஒரு சத்தியம் தவறாத பசுவைக் கொன்று தின்றால் அந்த இறைவனும் என்னை மன்னிக்க மாட்டான். நீ என் சகோதரியைப போன்றவள். உன்னைத் தின்று உயிர் வாழ்ந்து நான் என்ன சாதிக்கப்போகிறேன். என்னை மன்னித்து விடு’.

புண்யகோடியைத் தின்று பசியாற விரும்பாமல், பசியையும் தாங்கிக் கொள்ள முடியாமல் அற்புதா என்ற அந்தப் புலி மலையுச்சியில் இருந்து கீழே குதித்துத் தன் உயிரை மாய்த்துக் கொண்டது. புண்யகோடி மீண்டும் தன் இருப்பிடம் திரும்ப அதன் கன்றும், காளிங்கனும், மற்ற பசுக்களும் பெருமகிழ்ச்சி அடைந்தன.

இது போன்ற பழம்பாடல்களில் நம் முன்னோர் வைத்திருந்த மதிப்பீடுகளையும், நம் வேர்களையும் காணலாம். இது போன்ற பாடல்களை அல்லது இதற்கு இணையான மேன்மையான படைப்புகளை உருவாக்கி நம் சிறார்களுக்குப் படிக்கத் தரவும் தவறிக் கொண்டிருக்கிறோம். இந்த அலட்சியம் அறிவீனம் மட்டுமல்ல, ஒரு விதத்தில் தற்கொலையும் கூடத் தான். சிந்திப்போமா!

# வேலணைப் பிரதேச சபையின் விசேட நடமாடும் சேவை

(வேலணை)

காணி உரிமம் தொடர்பாகவும் காணிகளுக்கான உறுதிப் பத்திரம் தொடர்பாகவும் பொது மக்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக வேலணைப் பிரதேச சபை விசேட நடமாடும் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் இந்த நடமாடும் சேவையில் அனைவரும் பங்குபற்றித் தமது காணி உறுதிப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வேலணைப் பிரதேச சபையின உப பணிமனைகளில் ஒன்றான அல்லைப்பிட்டி உப பணிமனையில் இந்தப் பதிவு நடவடிக்கைகள் இடம்பெறவிருக்கின்றன. மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய உறுதி ஆவணத்தின் மூல உறுதியுடன் அதன் நிழற்படபிரதி, தேசிய அடையாள அட்டை ஆகிவற்றுடன் 21 ஆம் திகதி அல்லைப்பிட்டியில் உள்ள (பழைய கிராமச் சபை) பணிமனைக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (05)

# கெற்பேலி கிராமத்திற்கு மிக விரைவில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கெற்பேலி பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச மக்கள் முன்னர் மின்சார விநியோகம் இன்றி பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது இம் மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய முதற்கட்ட நடவடிக்கையாக மின்கம்பங்கள் நடப்பட்டு வயர்கள் பொருத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பிரதேச மக்கள் தாம் நன்மையடையவிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (நி)

# 25 வீடுகள், இரண்டு காணிகள் உரியவர்களிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரியாலையில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமாக இருந்துவந்த பகுதியில் உள்ள இருபத்தைந்து வீடுகள், இரண்டு காணிகள் என்பன நேற்றைய தினம் படையினரால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒப்படைக்கப்பட்டுள்ள இவ் வீடுகள் இராணுவத்தினரால் புனரமைத்துக் கொடுக்கவும் வீட்டு உரிமையாளரிடம் உறுதி மொழி வழ்ங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

குறித்த வீடுகள் மற்றும் காணிகளைக் கையளிக்கும் நிகழ்வு 512 ஆவது படைப்பிரிவினரது ஏற்பாட்டில் அரியாலை தபால் கட்டைச் சந்தியில் அமைந்திருக்கும் இராணுவ முகாமில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது இதற்கான கடிதத்தை யாழ். பலாலி படைப்பிரிவின் உயர் இராணுவ அதிகாரி விக்கிரமரட்ண, நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி சுரேந்திரநாதனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பண்டயினரால் கையளிக்கப்பட்ட வீட்டு மற்றும் காணி உரிமையாளர்கள் இராணுவ அதிகாரிகள், குறித்த பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)

# குண்டும் குழியுமாக வீதி புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சம்பாக்கி மாவடி வீதியின் முதலாம் ஒழுங்கை குண்டும் குழியுமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் இவ்வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு சேதமடைந்துள்ள வீதியை இப்பிரதேச மக்கள் சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரி பிரதேச அமைப்பாளருமான அலெக்சாண்டர் சாள்ஸிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இதனை அடுத்து அமைப்பாளர் இவ் வீதிப் புனரமைப்புக் குறித்து தாம் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளதுடன் இவ்விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் க.கமலேந்திரனிடம் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து யாழ். மாவட்ட அமைப்பாளர் இவ்வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மக்களிடம் தெரிவித்துள்ளனர். (நி)

# பண மோசடிக் குற்றச்சாட்டு சந்தேக நபர் மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பதினைந்து இலட்சம் ரூபா வரை பண மோசடியில் ஈடுபட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த நபரை யாழ். பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைதுசெய்து அவருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கினைப் பதிவுசெய்தனர.

கடந்த 14 ஆம் திகதி அன்று கைதுசெய்யப்பட்ட இந்நபர் மீதான வழக்கொன்றை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளியை ஒரு இலட்சம் ரூபா இரண்டு ஆள் பிணையில் செல்ல யாழ் நீதவான நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அனுமதி வழங்கினார்.

அத்துடன் பிணை வழங்குபவர்களில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்கவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார். (பா)

## சர்வதேச...

போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து, மீள சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளின் துப்பாக்கி முனையில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த 3 இலட்சம் மக்களை படையினர் பாதுகாப்பாக மீட்டெடுத்துள்ளனர். வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கை நிலைமைகளை கண்காணிக்க இடமில்லை. எவரும் இலங்கைக்கு செல்ல தடையில்லை. தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. தமிழ் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகளவு வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் வடக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பலாலி ஆசிரியர்...

பயிற்சிக் கல்லூரியை அதி உயர்பாதுகாப்பு வலயத்திற்கு அப்பால் முழுமையான வசதிகளைக் கொண்ட உயர்கல்விப் பயிற்சி நிறுவனமாக உருவாக்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறியுடன் இணைந்து தீர்மானித்திருந்த நிலையிலேயே இக்கல்லூரியை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கும் கருத்துக்கள் நிலவத் தொடங்கின.

இந்நிலையில் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடந்த 13 ஆம் திகதி தமக்கு வேறு மாவட்டங்களுக்கு பயிற்சிகளுக்காக செல்வதில் சிரமங்கள் இருப்பதாகவும், தம்மை குறிப்பிட்ட மாவட்டங்களுக்குச் சென்று கையொப்பம் இடுமாறும் கல்வி அமைச்சினால் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு தமது நிலையை கவனத்தில் கொண்டு யாழ்ப்பாணத்திலேயே தமக்கான பயிற்சி நிலையம் அமைத்துத் தந்து உதவுமாறும் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலிடம் வழங்கினார்கள்.

பயிற்சி ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்குச் சென்று பயிற்சிகளைத் தொடர வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தரமான ஏற்பாடொன்றை ஏற்படுத்தும்வரை, தற்காலிமாக கோப்பாய் முத்துத்தம்பி மண்டபத்தில் பயிற்சி ஆசிரியர்கள் கையொப்பமிடவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் கோப்பாய் முத்துத்தம்பி மண்டபத்தில் கையொப்பம் இட்டுவந்தனர். இருந்தபோதும் அவர்களுக்கான பயிற்சி வழங்கப்படாமலிருப்பதை கவனத்தில் கொண்ட அமைச்சர் டக்ளஸ், கல்வியமைச்சர் உள்ளிட்ட உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடியதற்கு இணங்க எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடநெறிகளை தற்காலிகமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மேற்கொள்வது என்றும் ஆங்கில பாடநெறியினை பலாலி ஆசியர் பயிற்சிக் கலாசாலையில் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் பயற்சிக்காக ஆசிரிய மாணவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்வது இதன் மூலம் தடுக்கப்பட்டுள்ளதுடன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மீளவும் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்காலத்தில் இக்கல்லூரியை முழுமையான வசதிகளைக் கொண்ட உயர் நிறுவனமாக மாற்றியமைப்பதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக நேற்றையதினம் யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை அவதானித்த கல்வி அமைச்சு உயர் அதிகாரிகளான முரளிதரன், சந்திராஜா ஆகியோர் தெரிவித்தனர். அத்துடன் விரும்பினால் மட்டக்களப்புக்குச் சென்று பதிவுகளை மேற்கொண்ட ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திற்கு வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தெரிவுக்குழுவில்...

மேலும் பேச்சுவார்த்தைகளில் நம்பகத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமாயின் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதைப் போன்று அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் அண்மைக்காலமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தன, இதன்போது முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தமுடியும் என்பதை ஐ.தே.க ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் முதற்கட்ட கலந்துரையாடலின்போது அறிவித்தது. இது தொடர்பான இணக்கப்பாட்டினை அரசாங்கம் எமக்கு அறிவித்தது. இது தொடர்பாக கூட்டமைப்புடன் ஐ.தே.க கலந்துரையாடியுள்ளது என அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிதளவிலான திருத்தங்களையே முன்வைத்துள்ளது. இந்த திருத்தங்களையும் அரசாங்கத்தின் இணக்கப்பாட்டிற்காக ஐ.தே.க சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பாக தெரிவிக்கப்படும் இணக்கப்பாட்டிற்கு அமையவே பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொன்சேகாவிற்கு...

கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் சரத்பொன்சேகா, நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரது உடல்நிலை இன்னமும் சரியாக வில்லை என்று அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். சட்டத்தரணிகளின் தகவலை செவிமடுத்த நீதிபதி, சரத் பொன்சேகாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதால் அதற்கான பத்திரங்களில் அவர் கையொப்பமிட வேண்டியுள்ளதாகவும் அதற்காக வைத்தியசாலைக்குச் சென்று உரிய ஆவணங்களில் கையெழுத்து பெற்றுவருமாறு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து வைத்தியசாலைக்குச் சென்ற பதிவாளர் பொன்சேகாவிடம் கையொப்பத்தைப் பெற்றார். எனினும் வெள்ளைக்கொடி வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சரத்பொன்சேகா தொடர்ந்தும் சிறையில் உள்ளார். இவ்வழக்குத் தீர்ப்புக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலை...

மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமக்கு பாதுகாப்பு வழங்கவேண்டுமென கோஷம் எழுப்பியதுடன் துணைவேந்தரின் உருவப்படத்தையும் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.(பா)

# பரிந்துரை குறித்த அறிக்கை கையளித்தது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

இதனைத் தாம் ஜனாதிபதியின் செயலாளர் காரியாலயத்தில் நேற்று மாலை கையளித்ததாக கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் கற்றுக்கொண்ட பாடங்கள் அறிக்கை தொடர்பில் தமது கருத்துக்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அண்மையில் கேட்டிருந்தார். இதன் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது கருத்தை நேற்று சமர்ப்பித்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு நிலையானதாக இருக்கவேண்டும். நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படவேண்டும். ஊடக சுதந்திரம் மதிக்கப்படவேண்டும்.

மதங்களுக்கு இடையிலான சகிப்புதன்மை பேணப்படவேண்டும் சமூக, பொருளாதார கட்டமைப்புகளில் சீரமைப்பு வேண்டும். அதில் பாகுபாடற்ற நிலை வேண்டும். சிவில் நிர்வாகம், நல்லாட்சி என்பனவே இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு வழிகோலும்.

இந்தநிலையில் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கக்குழுவில் பல சிறந்த பரிந்துரைகள் உள்ளன. அவை தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கோரியுள்ளதாக ஹசன் அலி தெரிவித்தார்.


இருப்பினும், கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில், முஸ்லிம்களின் உள்ளக இடப்பெயர்வு மற்றும் காணிகள் தொடர்பில் உரிய காரணங்கள் தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை

இவை சீர்செய்யப்பட்ட நிலையில் கற்றுக்கொண்ட பாடங்களின் குழு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

குறித்த அறிக்கையில், முஸ்லிம்கள் சார்பாக உள்ளடக்கப்படாத விடயங்களை உள்ளடக்கி தேசிய ரீதியில் உண்மையான செயற்திட்டம் முன்னெடுக்கப் படும்போதே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பமுடியும் என்று தமது கருத்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

# பொன்சேகாவின் விடுதலை அனைவருக்கும் உரியது

## கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விரைவாக விடுதலை செய்யப்படுவதற்கான பெருமையானது இலங்கை மக்களுக்கும் அவருக்கு ஆதரவளித்த சர்வதேச சமூகத்திற்கும் செல்ல வேண்டும் என சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கான மக்கள் இயக்கத்தின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார்.

நாடு முழுவதும் கீழ் மட்ட மக்கள், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அங்கத்தவர் கள் உட்பட பலரும் பகிரங்கமாக ஆதரவளிக்க முடியாத போதிலும் பொன்சேகாவின் விடுதலையை ஆதரித்ததாக அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அவரை விடுதலை செய்வதில் அதிக எண்ணிக்கையான மக்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். எனவே இதற்கான பெருமை எந்தவொரு தனி நபருக்கோஅல்லது எமது இயக்கத்திற்கோ மாத்திரம் உரியதல்ல என அர்ஜுன கூறினார்.

# இளவயது திருமணத்திற்கு உடந்தை பருத்தித்துறை வாசிக்கு பிணை

(திருநெல்வேலி)

13 வயதுச் சிறுமி ஒருவரை கூட்டிச்சென்ற இளைஞருக்கு வீடு கொடுத்து அடைக்கலம் கொடுத்து ஆதரவு வழங்கிய நபர் ஒருவர் யாழ். நீதிமன்றினால் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

17.11.2010 இல் யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த இச்சிறுமியை இளைஞர் கூட்டிச்சென்றதையடுத்து சிறுமியின் பெற்றோர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பருத்தித்துறையில் சிறுமியுடன் வாழ்ந்து வந்த இளைஞரை பொலிஸார் வலை வீசிக் கண்டுபிடித்தனர். இருவரும் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இளைஞர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சிறுமி சிறுவர் இல்லமொன்றில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் இளைஞர் 20 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 75 ஆயிரம் ரூபாவுக்கான 2 ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இளைஞருக்கும் சிறுமிக்கும் அடைக்கலம் கொடுத்த நபர் நேற்று யாழ். நீதிமன்றில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை 10 ஆயிரம் ரூபாவுக்கான 2 ஆட்பிணையில் செல்வதற்கு நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (137,பா)


# கணக்காளர் தேவை

கணக்காளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

* உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களும், கணக்காளராக சேவையாற்றிய அனுபவம் உள்ளவர்களும் கணக்கியல் துறையில் பட்டதாரிகளாக உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* கணினி அறிவும், ஆங்கில அறிவும் அவசியமாகக் கருதப்படும். தினசரிப் பத்திரிகையில் கடமையாற்றிய அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பிரதான வீதியில், இல.373 இல் உள்ள தினமுரசு அலுவலகத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்தித்து தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க முடியும்.

ஆளணி முகாமையாளர்,
தினமுரசு.

இல.373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


# ஜானக பெரேரா படுகொலை விசாரணை ஓகஸ்டில் ஆரம்பம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கை ஓகஸ்ட் மாதம் 27,28 மற்றும் 29 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், வடமத்திய மாகாணத்திற்கான மேல் நீதிமன்ற நீதிபதி சுசந்த குமார ரத்நாயக்க இந்தத் தீர்மானத்தினை எடுத்துள்ளார்.

பிரதிவாதிகளுக்கு சட்ட உதவியினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமையின் காரணமாக வழக்கு தொடர்ந்தும் ஒத்திவைக்கப்படுவதனால் முறைப்பாட்டாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக அவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

குறித்த வழக்கினை ஓகஸ்ட் மாதம் 27,28 மற்றும் 29 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக விசாரணை செய்யுமாறும் அதற்குத் தேவையான சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுமாறும் நீதிபதி பிரதிவாதிகளுக்கு மீண்டும் அறிவித்தார்.

# இலங்கை மாணவர் மீது இந்தியாவில் தாக்குதல்

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் உள்ள கர்நால் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த முதுமானி பட்டப்படிப்பு மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டுள்ளார்.

என்.எம்.ஏ.கே.நாராயணா (வயது - 42) என்பரே இவ்வாறு தாக்குதலுக்கு உட்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது தாக்குதல் நடத்தி, அவரின் நகைகள் மற்றும் பணப்பையை களவாட முயற்சித்திருப்பதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். தாக்குதலுக்கு உட்பட்டவர் இன்று நாடு திரும்பவிருந்ததா தெரிவிக்கப்படுகிறது.

# பஸ்ஸில் தவறவிட்ட பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த சாரதி

(வவுனியா)

வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வந்த தனியார் பஸ் ஒன்றில் பயணி ஒருவர் தவறவிட்ட பணப்பையினை கண்டெடுத்த பஸ்ஸின் உரிமையாளரும் சாரதியும் மன்னார் தனியார் பேருந்து சங்கத்தின் ஊடாக உரியவரிடம் நேற்றைய தினம் ஒப்படைத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில்



மேலும் தெரியவருவதாவது,

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு மன்னாரில் இருந்து வவுனியாவிற்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் இந்த பஸ், நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி புறப்படவிருந்தது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வந்து பின்னர் வவுனியாவில் இருந்து மன்னார் வருவதற்காக மாசிலமாணி யோசப் என்பவரும் அவரது குடும்பத்தினரும் இந்த பஸ்ஸில் ஏறிப் பயணித்துள்ளனர்.

மன்னார் வந்த இவர்கள் 43 ஆயிரம் ரூபா பணத்துடன் தமது பணப்பையை அவர்கள் பயணித்த இந்த பஸ்ஸிற்குள்ளேயே தவறவிட்டுச் சென்றுள்ளனர். தவறவிடப்பட்ட இப்பணப்பையினை கண்டெடுத்த பஸ்ஸின் சாரதியும் உரிமையாளரும் மன்னார் தனியார் பேருந்து சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இப்பணப்பைக்கு உரியவர் மன்னார் தனியார் பேருந்துச் சங்கத்திடம் உடன் முறையிட்டு அப்பணப்பையினை அடையாளம் காட்டியுள்ளார். இப்பணப்பையில் 43 ஆயிரம் ரூபா பணத்துடன் வீட்டு சாவியும் காணப்பட்டது.

குறித்த பஸ்ஸின் உரிமையாளருக்கு மன்னார் தனியார் பேருந்து சங்கம் தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தது.

# வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் 100 வீதம் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் அந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்டு விட்டனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் 2 இலட்சத்து 93 ஆயிரம் பொது மக்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர். இவர்களில் இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் பேர் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை நடைபெறவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இவ் ஆலயத்தில் மஹோற்சவ காலத்திலிருந்து தினமும் காலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை விநாயகர் மகத்துவம் எனும் தலைப்பில் வலிகாமம் கல்வி வலய சமயபாட ஆசிரிய ஆலோசகர் கந்தசத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றி வருகிறார். (06)

# பொன்சேகாவின் விடுதலை ஜனநாயகத்தை ஏற்படுத்தாது

சர்வதேச அழுத்தம் காரணமாகவே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட உள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து அனுரகுமார திஸாநாயக்க கூறுகையில்,

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவோ அல்லது வேறும் எந்த நல்லெண்ண நோக்கிலோ சரத் பொன்சேகா குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை. சரத் பொன்சேகாவின் விடுதலையானது நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு விட்டதாக அர்த்தப்படாது.

விடுதலை செய்யப்பட்டதன் பின்னர், சரத் பொன்சேகாவின் அரசியல் நிலைப்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும். சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.